
# திறவுகோல்

சித்திரை 2049 / மாத இதழ்




வெளியீடு

**மன்னையின் மைந்தர்கள் குழு**

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# ONGC ஸ்டேட் - 2101



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

ஈதன் அந்த கனடா அதிகாலை குளிரில் எழுந்து தன்னுடைய நானோ மருத்துவர் பட்டம் வாங்க தயாராக உட்காருகிறான். உலகம் முழுதும் உள்ள நானோ மருத்துவ மாணவர்கள் பட்டம் பெறும் நிகழ்வின் மெய்நிகர் கூட்டத்தில் தங்களுடைய மென்திரை கண்ணாடி மூலம் இணைந்துக் கொள்கின்றனர். நேரம் சரியாக 7.30 இருக்கும் பொழுது மென்திரையில் அவரவர் மொழிகளில் வரவேற்பு எழுத்து வருகிறது.

ஈதனுக்கு தமிழ் மொழியில் நானோ மருத்துவ பட்டமளிப்பு நிகழ்வு ஏப்ரல் 14, 2101 என்று ஓடுகிறது. அதை தொடர்ந்து உலகின் சிறந்த நானோ மருத்துவர் சித்தர் அவர்கள் அனைவருக்கும் பட்டமளிக்கிறார். ஈதன் என்ற பெயர் திரையில் ஒளித்து பட்டம் ஈதன் உடலிலுள்ள நானோ சிப்பில் பதிவேற்றப்பட்டது. நிகழ்விலிருந்து வெளியேறிய ஈதன் நேராக தாத்தா அறைக்கு சென்று பட்டம் பெற்றதை மகிழ்ச்சியுடன் பகிர்கிறான். தாத்தா கொள்ளுப்பேரனைக் கட்டி அணைத்து முத்தம் கொடுத்து தன் விழித்திரையில் உள்ள ஸ்கேனரை கொண்டு ஈதனின் நானோசிப்பை ஸ்கேன் செய்து பட்டம் பெற்றதை உறுதிப்படுத்திக் கொள்கிறார்.

அடுத்து என்ன செய்ய போகிறாய் என ஈதனிடம் தாத்தா வினவுகிறார். அதற்கு ஈதன் நானோ சிப்பைக் கொண்டு மனிதனின் அனைத்து உறுப்புகளையும் சரியாக பராமரித்தாலும் உயிர் எப்படி பிரிகிறது என்கிற ஆராய்ச்சியில் இறங்க போவதாக கூறுகிறான். உணவுப் பெட்டி காலை 7.30 மணிக்கு ஒலியெழுப்பி சாப்பிட வேண்டும் என்பதை நினைவூட்டுகிறது. ஈதன் உணவு பெட்டியின் கதவை திறந்து இருவருக்குமான தனித்தனி உள்பெட்டியினுள் பிரத்யேகமாக அவர்களின் நானோ சிப் அவரவரின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு பரிந்துரைத்த உணவை எடுத்துத் தாத்தாவிற்கு கொடுத்துவிட்டு தானும் உண்ண ஆரம்பிக்கிறான்.

அதை வாங்கி சாப்பிடாமல் ஏதோ யோசனையில் மூழ்குகிறார் தாத்தா. தாத்தாவை தொட்டு உணவு உட்கொள்ள சொல்கிறான் ஈதன். ஈதனையே வெறித்துப் பார்க்கும் தாத்தாவின் கண்களில் இருந்து நீர் வழிந்தோடுகிறது. பதற்றமடைந்த ஈதன் தன்னுடைய ஸ்கேனரைக் கொண்டு தாத்தாவின் நானோ சிப்பை ஸ்கேன் செய்து பார்த்ததில் மூளையில் சில வேதி மாற்றங்கள் நடந்துள்ளதும் அது கவலைக்கான வேதிமாற்றம் எனவும் ஸ்கேனர் காட்டுகிறது. ஈதன் தாத்தாவை ஏறிட்டுப் பார்க்கிறான். தாத்தா ஏதும் சொல்லாமல் உணவருந்திவிட்டு தன் அறைக்கு சென்றுவிடுகிறார்.

ஈதனும் என்னவென்று புரியாமல் அறையிலிருந்து வெளியேறி வீட்டு மாடியில் வந்து நின்று ஊரை வேடிக்கை பார்க்கிறான். நானோ கிளப்பில் 4 வயதில் சேர்ந்த ஈதன்

விடுமுறைக்கு மட்டுமே வீட்டிற்கு வருவான். பள்ளி கல்லூரி என அனைத்தையும் முடித்துவிட்டு கிளப்-பின் மருத்துவமனையிலேயே வேலையையும் உறுதி ஆன பின்பே வீட்டிற்கு வந்துத் தங்குகிறான். இனி இவ்வீட்டிலிருந்து தான் வேலைக்கு செல்லப் போவதை நினைக்கும் பொழுது மிக மகிழ்ச்சியாக உணர்கிறான். அதே நேரத்தில் தாத்தாவின் கவலைக்கான காரணம் என்னவென்று தெரியாமல் மனம் குழம்புகிறான். ஈதன் விடுமுறைக்கு வரும் பொழுதெல்லாம் தாத்தா அவனை மிக மகிழ்ச்சியாக வைத்திருப்பார். வேண்டியதையெல்லாம் செய்வார். தேவையானதையெல்லாம் வாங்கி தருவார். ஏதோ கவலையை உள் வைத்து வெளிக்காட்டாமல் இருக்கிறார் என்பது மட்டும் ஈதனுக்கு புரிகிறது.

மாலை, தாத்தாவை அருகில் உள்ள பூங்காவிற்கு அழைத்துச் சென்று பேச்சுக் கொடுக்கிறான். என்ன கவலை என கேட்டதும் மீண்டும் அழ ஆரம்பிக்கிறார். அவர் அழுது முடிக்கும் வரை பொறுமையாக இருந்து மீண்டும் என்ன கவலை என கேட்டதும் தாத்தா சொல்ல ஆரம்பிக்கிறார். ‘‘அப்ப எனக்கு 4 வயசு இருக்கும். அப்பாவுடன் அதிகாலையில் எழுந்து நானும் அண்ணன்களும் கிணத்து தண்ணியில் குளித்து வயலுக்கு போவோம்’’. கிணறு என்றால் என்னவென்று தெரியாத ஈதன் அவரிடம் குறுக்கிட்டு கேட்காமல் அவர் சொல்வதை கேட்க ஆரம்பிக்கிறான். ‘‘அதிகாலையிலேயே ஊர் மிக சுறுசுறுப்பா இருக்கும். நெல் வயலின் வாசம், காய்கறி தோட்டத்தின் சிலுசிலுப்பு’’ என பார்க்கவே பசுமையா இதமா இருக்கும்.

அப்பாவும் அண்ணனும்  வாய்க்கால் கரையில் நடந்து வந்தால் நான் எப்பொழுதும் வாய்க்காலில் இறங்கி தான் ஓடுவேன் என தாத்தா பேசிக்கொண்டிருக்கும் பொழுதே அவர் முகத்தில் படர்ந்திருந்த சோகம் நீங்கி புதுவித உற்சாகத்தை ஈதன் உணர்கிறான். ‘‘போர்செட்டில் உள்ள கயித்து கட்டிலில் படுத்துகிட்டு வயலில் அப்பா செய்யும் வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அம்மா காலை உணவை சட்டியில் எடுத்து கொண்டு வந்திடுவார்.

எல்லோரும் மாமர நிழலில் தார்ப்பாய் போட்டு உக்காந்து பழைய சாதத்துக்கு வெங்காயத்தை கடிச்சிட்டே சாப்பிடுவோம். சிறிது நேரம் எல்லாம் அங்கேயே பேசிகிட்டு இருந்துட்டு மீண்டும் வேலை பாக்க கிளம்பிடுவார்கள். என்கூட பக்கத்து வயல்கார மணி சித்தப்பா பசங்களும் வந்து விளையாடுவாங்க. 2 ஆண்டு கழிச்சு என்னை பக்கத்துக்கு கிராமத்தில் உள்ள அரசு பள்ளியில் எங்கப்பா சேர்த்துவிட்டார். நான் தான் முதன் முதலில் எங்கள் வீட்டில் பள்ளிக்கு செல்ல ஆரம்பித்தேன். அண்ணன்கள் இருவரும் பள்ளிக்கு போகவில்லை‘‘ என கூறி ஏதும் பேசாமல் தாத்தா அமைதியாக இருந்தார்.

சில நிமிட அமைதிக்கு பிறகு தொடர்ந்த தாத்தா ‘‘ஒரு நாள் திடீர்னு ஓ என் ஜி சி அதிகாரிகள் வந்து குழாய் பதிக்க ஆரம்பித்தாங்க. ஊரில் உள்ள சில அண்ணன்கள் அதை எதிர்த்து போராட்டம் நடத்துனாங்க. இது போல் அக்கம்பக்கத்து ஊரில் நிறைய

இடங்களில் பதித்து பல இடங்களில் மக்கள் அவர்களுக்கு எதிராக போராட்டம் நடத்திட்டு இருப்பதையும் ஊர்மக்களுக்கு அவர்கள் சொன்னார்கள்.

போராட்டங்கள் ஒருபுறம் நடந்துக்கொண்டிருக்கிற போதே ஓ என் ஜி சி, அரசின் உதவியுடன் குழாய் பதித்துக் கொண்டே இருந்தனர். அப்ப எனக்கு ஒன்னும் தெரியாது. அவங்களோட பெரிய பெரிய மிஷினெல்லாம் வேடிக்கை பார்த்துட்டே நான் பள்ளிக்கு போயிட்டு வருவேன். சில வருடம் இதே சூழல் நிலவியது. ஆத்துநீர் கொஞ்ச கொஞ்சமா வரது நின்னுச்சு, போர் தண்ணியும் களிம்பு மாதிரி வந்தது. தண்ணி பிரச்சினையினால் சரியா விவசாயம் பண்ண முடியல.

அப்பாவும் என்னன்னவோ பண்ணி கடன் வாங்கி விவசாயம் பண்ணி பார்த்து ஒன்னும் சரியா வரலை. ஒருகட்டத்தில் வீட்டுல ஒருநாளைக்கு ஒருவேளை தான் சாப்பாடு என்ற நிலை. எனக்கு மட்டும் பள்ளியில் உணவு கொடுப்பதால் 2 வேலை சாப்பாடு கிடைச்சது. அதுக்காகவே என்னை அப்பா பள்ளியிலிருந்து நிறுத்தலை. அண்ணன் 2 பேரும் வயல் வேலையை விட்டுட்டு கட்டிட வேலைக்கு போக ஆரம்பிச்சிட்டாங்க. அப்பா மட்டும் விடாப்பிடியா விவசாயம் பண்ணிட்டு இருந்து கடன் வாங்கிட்டே இருந்தார்.

வீட்டுலயும் அம்மாவும், அண்ணன்களும் அவரை விவசாயத்தை விட சொல்லி திட்ட ஆரம்பித்தனர். ஒருகட்டத்தில் வீட்டுலேயும் பிரச்சனை கடன்காரர்களும் நெருக்க வேறு வழியில்லாமல் பூச்சிமருந்து குடிச்சிட்டு வயலிலேயே செத்துப்போய்ட்டார். இதுபோல் சாவை நான் அப்ப அடிக்கடி பார்த்ததால் எனக்கு ஒன்னும் பெருசா தெரியலை. கொஞ்ச நாள் சொந்தக்காரங்களாம் வீட்ல இருந்தாங்க. வயலை பத்தியே பேசிட்டு இருந்தாங்க. கடைசியா முத்து மாமா யார் யாரையோ வீட்டுக்கு அழைச்சிட்டு வந்து பேசுனார். வயலை அவர்கள் எடுத்துக்கிட்டு அதுக்கு பணம் தருவதாகவும் ஒரு அண்ணனுக்கு ஓ என் ஜி சியில் வேலை தருவதாகவும் கூறினர். அண்ணனும் அம்மாவும் சம்மதிச்சு என் கைரேகையெல்லாம் வாங்கிக்கிட்டாங்க. அன்னைக்கு ஆட்டுக்கறி எடுத்து ரொம்ப நாளுக்கப்புறம் வயிறுநிறைய சாப்பிட்டோம்.

வயலை வித்த பணத்தை வச்சி கடனை கொடுத்திட்டு சின்ன அண்ணன் வெளிநாடு வேலைக்கு போய்ட்டான். பெரிய அண்ணனுக்கு அங்கேயே வேலை கொடுத்துட்டாங்க. நல்ல உணவு கிடைச்சாலும் நல்ல தண்ணி கிடைக்கல. கிராமத்துல பல பேர் உடம்பு சரியில்லாம அடிக்கடி இறந்து போனாங்க. எங்க கிராமம்னு மட்டும் இல்ல சுத்துவட்டாரம் பூரா அப்படி தான் இருந்தது. நான் பள்ளி முடிக்கும் போது அந்த சுத்துவட்டாராம் முழுசா ஓ என் ஜி சி கட்டுப்பாட்டுல வந்துட்டு. அவங்க அங்க வேலை பாக்குறவங்களை தவிர எல்லாரையும் ஊரைவிட்டு போக சொல்லிவிட்டார்கள்.

தொடர் நோயாலும் நல்ல குடிநீர் இல்லாததானாலும் வேறுவழியில்லாமல் ஊரை காலி செஞ்சிட்டு சின்ன அண்ணனுடன் கனடாவிற்கு வந்துட்டோம். அம்மாவுக்கும் இங்கு

வீட்டு வேலை கிடைச்சது. எனக்கும் ஒரு கல்லூரியில் இடம் கிடைத்துப் பகுதி நேர வேலையும் கிடைச்சது. எங்களை போல் பலர் அவ்வூரை காலி செஞ்சிட்டு போய்ட்டாங்க. நாங்கள் இங்கு வந்தாலும் பெரியண்ணன் மட்டும் அங்கு இருந்தார். அவர் திருமணத்திற்கும் நாங்கள் எல்லாம் போயிட்டு வந்தோம். இங்கு எங்களுக்கு போதிய வருவாய் கிடைச்சாலும் எதையோ இழந்தது போல தான் வாழ்ந்து வந்தோம்.

கொஞ்ச வருடம் கழிச்சு அங்கு நிலக்கரி சுரங்கம் தோண்ட போவதாக கூறி அண்ணனை தொழிற்சாலையிலேயே தங்க சொல்லி உத்தரவிட்டதாகவும், அண்ணி மற்றும் குழந்தைகளை ஊருக்கு வெளியே தங்க வைத்ததாகவும் அண்ணி சொன்னார். நாங்கள் அவ்வேலையை விட்டு இங்கு வரச்சொல்லி எவ்வளவோ கூப்பிட்டும் அவர்கள் வரவில்லை. அதன் பின் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை தொடர்பு கொள்ள இயலவில்லை.

முழுக்கட்டுப்பாடும் ஓ என் ஜி சி வசம் வந்துவிட்டது. சின்ன அண்ணனும் எவ்வளவோ முயன்றும் அங்கு செல்ல அவரை இந்திய அரசாங்கம் அனுமதிக்கவில்லை. அவர்கள் என்ன ஆனார்கள், ஊர் இப்பொழுது எப்படி இருக்கிறது என தெரியவில்லை என கூறிக்கொண்டே ஓ வென தாத்தா அழ ஆரம்பித்தார். ஈதனும் தாங்க இயலாமல் அழ ஆரம்பித்தான்.

''ஈதா நீ அங்கு போய் தற்போதைய நிலையை பார்த்து வரியா. இணையத்தில் நான் தேடிப் பார்த்துவிட்டேன் எந்த செய்தியும் இல்லை'' என தாத்தா தழுதழுத்து கேட்க மறுப்பு கூறாமல், சரி தாத்தா நான் போகிறேன் என்றான் ஈதன். அந்த ஊர் பெயரென்ன எங்குள்ளது என ஈதன் கேட்க. அடுத்த நொடி 10.6649K N, 79.4507K E என்கிறார் தாத்தா. பிறகு தாத்தாவிடம் அவரின் அப்பா மற்றும் அண்ணன் குடும்பத்தைப் பற்றிய விவரங்களைப் பெற்று கொண்டு ஈதன் தன் அறைக்கு செல்கிறான். தன்னுடைய மென்திரையில் அந்த ஆய எண்ணை குறிப்பிட்டதும் '' ஓ என் ஜி சி ஸ்டேட்'' என காட்டுகிறது.

அதன் தெற்குப்புறம் ''நியூக்ளியர் ஸ்டேட்'' என்றும், மேற்கு பக்கம் ''நியூட்ரினோ ஸ்டேட்'' என்றும், வடக்கு பக்கம் ''அதானி போர்ட் ஸ்டேட்'' என சூழ உள்ளதாக மென்திரை காண்பிக்கிறது. அங்கு செல்ல நடைமுறையை தேடும் பொழுது'' அம்பானி அலுவலக மென்திரை இணைப்பிற்கு செல்கிறது. மென்திரையில் பேசிய ரோபோட் விவரங்களை கேட்டுவிட்டு ஓ என் ஜி சி ஸ்டேட்டிற்கு செல்வதற்கு, போக்குவரத்திற்கு, அனுமதிக்கு என அனைத்திற்குமான டிஜிட்டல் பாயிண்ட்ஸை கூறி கட்ட சொல்கிறது. அதற்கான சமிக்கையை தன் நானோ சிப் மூலம் ஈதன் அனுப்ப அதனை தன்னுடைய ரிசீவர் மூலம் ரோபோட் பெற்றுக்கொண்டு, ஓ என் ஜி சி க்குள் உள்நுழையும் அனுமதி குறியீட்டை ஈதனின் நானோ சிப்பிற்குள் பதிவேற்றிவிடுகிறது. பயண விவரங்களை தன்னுடைய மென்திரையில் ஈதன் பதிவேற்றி அம்பானி அலுவலகத்திற்கு அனுப்பிடுகிறான்.

தாத்தாவை கட்டியணைத்து விடைப்பெற்று கொண்டு பயணத்தை ஆரம்பிக்கிறான் ஈதன். கனடிய ஹைட்ரா லூப் நிலையத்திற்கு சென்று அங்கிருந்து வான்வழி பயணத்தை ஆரம்பிக்கிறான். சில நிமிடங்களில் அதானி போர்ட்டில் இறங்கும் ஈதன் அங்கிருந்து காவ்ரே கடல் நீர்வழி தடம் மூலம் ஓ என் ஜி சி ஸ்டேட்டிற்கு அழைத்து செல்லப்படுகிறான். அனைத்து இடத்திலும் அவனுடைய நானோ சிப்பில் உள்ள அனுமதி குறியீட்டை ஸ்கேன் செய்து அனுமதிக்கப்படுகிறான். அவனுக்காக பிரத்யேக உடை கொடுக்கப்படுகிறது. அதை வாங்கிப் போட்டுக் கொண்டு அங்குள்ள ஓய்வுப்பெட்டிக்கு அழைத்து செல்லப்படும் ஈதன் அங்கேயே அன்றிரவை தங்க பணிக்கப்படுகிறான். 8 அடி நீளம் 5 அடி உருளை போன்ற மூடியுள்ள பெட்டியில் எப்படி தங்குவது, உணவு, பாத்ரூம், டாய்லெட் பற்றியெல்லாம் யோசித்துவிட்டு அவரிடம் வினவுகிறான். அனைத்தும் அங்குள்ளது.

நீங்கள் ஒவ்வொரு பட்டனை அழுத்தும் பொழுதும் அந்தந்த வேலைகள் நடக்கும் என்கிறான் அவன். குழப்பத்தினூடே பெட்டிக்குள் செல்கிறான் ஈதன். பெட்டி மூடி கொண்டு ஈதனுடைய நானோ சிப்பை பரிசோதித்து தமிழில் வணக்கம் என்கிறது. எது தேவையெனினும் முன்னுள்ள திரையில் உள்ள பொத்தானை அழுத்த சொல்லி குரல் அணைகிறது.

குழப்பத்துடன், குளிக்கும் பொத்தானை அழுத்தியதும் அப்பெட்டி பாத்ரூம் போல மாறி அவன் உடைகளை களைத்து ஏதோ திரவத்தையும் வாயுவையும் அவன் மீது செலுத்துகிறது. அடுத்த நொடி மீண்டும் அவ்வுடை அணியப்பெற்று படுத்திருக்கிறான். ஆச்சரியங்களிலும் குழப்பத்திலும் உள்ள அவன் உணவு பொத்தானை அழுத்துகிறான். உணவிற்கு ஒரு மாத்திரையும் நீரென குறிக்கப்பட்ட மாத்திரை அளவுள்ள பசையும் அதிலிருந்து வருகிறது. அதை எடுத்து வாயில் போட்டு கொண்டு பசையை சாப்பிடுகிறான். பசி தீருகிறது.

இவை அனைத்தையும் தன்னுடைய தாத்தாவிற்கு தெரிவிக்க வேண்டி அவரை தொடர்பு கொள்ள முயலும் பொழுது அக்குரல் இங்கிருந்து தொடர்பு கொள்ள இயலாது மன்னிக்கவும் என்கிறது. வேறு வழியில்லாமல் தூங்கி விழிக்கிறான். காலை பெட்டி திறக்கப்பட்டதும் அதிலிருந்து வெளியேறி சுற்றியும் பார்க்கிறான். இதுபோல் ஆயிரக்கணக்கானவர்கள் அதிலிருந்து சீருடையில் வெளியேறுகிறார்கள்.

அப்பொழுது தான் புரிகிறது இங்குள்ள அனைத்து தொழிலாளிகளும் இதில் தான் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று. வெளியுலகம் அற்று சிறை போல ஏதுமறியாமல் வாழ்ந்து வருகின்றனர் என்பதை நினைத்து வருந்துகிறான்.

அப்பொழுது ஒலிபெருக்கியிலிருந்து ஒரு குரல் வருகிறது. இன்றுடன் இச்சுரங்க பணிகள் நிறைவு பெறுகிறது என்றும், இதற்குமேல் எடுக்க நிலக்கரி இல்லை எனவும்

கூறப்படுகிறது. அனைவரும் ஆர் ஜி எஸ் டெம்பிளில் உள்ள காவ்ரே நீரோட்ட கரையில் அசம்பெல் ஆகும்படி கூறப்படுகிறது. இவனும் அவர்களுடன் அங்கு சென்று சேர்கிறான்.

வரும் வழியில் பேச்சு கொடுத்ததில் அவன் பேசுவதற்கு யாரும் செவிமடுக்காததைக் கண்டு விரக்தியடைகிறான். அவர்கள் இயந்திர குரலின் கட்டளைக்கு பணிய மட்டுமே கற்று கொடுக்கப்பட்டுள்ளனர் என்பதை உணர்ந்துக் கொள்கிறான். அவர்களுடைய நானோ சிம்மை ஸ்கேன் செய்து பார்த்ததில் அவர்கள் அனைவருக்கும் ஒரே டி என் ஏ மாடல் இருப்பதை மருத்துவனான ஈதன் கண்டு அதிர்ச்சி அடைகிறான். எனில் இவர்கள் அனைவரும் செயற்கையாக கருத்தரித்து இயந்திரங்களின் துணைக்கொண்டு உருவாகியுள்ளது தெரிகிறது.

ஆர் ஜி எஸ் டெம்பிளை அடைந்ததும் அங்கு சில அதிகாரிகள் இருந்தனர். அவர்களின் நானோ சிப்பை ஆராய்ந்த பொழுது அவர்கள் தன்னை போன்று இயற்கை வழியில் பிறந்திருப்பதும், ஓ என் ஜி சி ஸ்டேடில் உயரதிகாரத்தில் இருப்பதும் தெரிய வருகிறது. அவர்கள் தொழிலார்கள் அனைவரையும் வேறு ஒரு புதிய ஸ்டேடில் புதியதாக நிலக்கரி சுரங்கம் அமைக்க அழைத்து செல்வதாக கூறி ஹைபெர்லூப் கப்பல் பெட்டிகளில் ஏற்றினர்.

கடைசியாக அவர்களிடம் பேச்சு கொடுத்து தான் வந்த விவரத்தை ஈதன் சொன்னதும் அவர்கள் தன்னுடைய மென்திரையில் ஆராய்ந்து அனைவரும் சுரங்க விபத்துகளில் சிக்கி இறந்துவிட்டதாகவும், சந்ததிகள் யாருமில்லை என்பதையும் தெரிந்து கொள்கிறான். இயற்கை பேரிடரினால் ஏற்படும் சுரங்க விபத்துகளால் தான் ரோபோக்களை வைக்காமல் இதுபோல மனிதர்களை செயற்கையாக உற்பத்தி செய்வதையும் புரிந்துக் கொள்கிறான்.

அனைவரும் சென்றதும், நாமும் புறப்படலாம், உங்களை அதானி போர்டில் விட சொல்லி சமிக்கை அனுப்பியுள்ளனர் என அந்த அதிகாரி கூறுகிறார். அவரிடம் ஈதன் தன்னுடைய தாத்தா பற்றியும், அவருக்கு கடைசியாக இந்த இடத்தை காட்ட வேண்டும் அதற்கு மென்திரை இணைப்பை சில நிமிடங்கள் கொடுக்க சொல்லி உருக்கமாக கோரிக்கை வைக்கிறான். அவரும் ஏற்றுக்கொண்டு தன்னுடைய மென்திரை வழியே தாத்தாவை இணைக்கிறார்.

ஈதன் நின்றுக்கொண்டிருக்கும் இடத்தை அடையாளம் கண்டுக்கொண்ட தாத்தா ''ராஜ கோபால சாமி கோவில்'' என கூறி சாமி கும்பிடுகிறார். பிறகு நேற்றிலிருந்து தற்பொழுது வரை நடந்த நிகழ்வை ஈதன், தாத்தாவிடம் கூறுகிறான். அதைக் கேட்டு தொண்டைக் குழி அடைக்க கோவில் உச்சிக்கு போய் ஒருமுறை ஊரை காண்பிக்க சொல்கிறார். அதிகாரிகள் அனுமதி தரவே அங்கு சென்று ஊரை உயரத்திலிருந்து காண்பிக்கிறான்.

ஊரைச் சுற்றி கண்ணுக்கெட்டிய தூரம் வரை சுரங்க பள்ளத்தாக்காக தெரிகிறது. நடுவில் கோவிலும் அதனை ஒட்டி குறுக்கு வெட்டாக காவிரி ஆறு ஓடுவதை புரிந்து கொள்கிறார். அது குடகிலிருந்து ஆரம்பித்து பூம்புகாரில் முடியும் என ஈதனிடம் கூறும்பொழுது

அதனை மறுத்த ஈதன், இது அதானி போர்டிலிருந்து ஆரம்பித்து இங்கு வரும் கடல் நீர் என்கிறான். அப்பொழுது தான் அவருக்கு புரிகிறது, காவிரி முழுவதுமாக தடைப்பட்டு அதில் கடலிலிருந்து கடல்நீர் எதிர்திசையில் ஊருக்குள் வருகிறதென்பதை. எங்கு பார்த்தாலும் பச்சை பசேலென வயல்வெளிகளாக இருந்த நிலம் இன்று பொட்டல் சுரங்கமாக ஒரு மரம் கூட இல்லா பாலையாக இருப்பதை கண்டு தாத்தா உடைந்துப் போகிறார்.

அதிகாரி அழைக்கவே ஈதன் இறங்க எத்தனிக்கும் பொழுது கோவில் மேலுள்ள கூர்மையான கலசத்தை உடைத்து அதில் உள்ளவற்றை கீழே கொட்ட சொல்கிறார் தாத்தா. அதிலிருந்து கருமை நிறத்தில் மண்ணை போல ஏதேதோ கீழே விழுகிறது.

விதைப்போம் என கூறிய தாத்தாவின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது. தாத்தா கீழே சரிகிறார்.

- ரா.ராஜராஜன், மன்னார்குடி

மூன்று நாட்களாய்
தடைப்பட்டது மின்சாரம்..

தொலைக்காட்சி,
கைப்பேசி என எதுவும்
வேலை செய்யவில்லை...

வீட்டை விட்டு
வெளியே வந்தனர்
குழந்தைகள்..

பாவம் இப்போதாவது
விளையாடட்டும்..
குழந்தைகள்..!?



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

# மன்னையின் திருவிழா



இராசமன்னார்குடி

இரண்டு வயதில் பலூன் வாங்கி உடைந்ததும் முட்டை
செய்து இரசித்த நாட்கள் !!!
ஐந்து வயதில் மிட்டாய் கடிகாரம்
கட்டிக்கொண்ட நாட்கள் !!!
ஏழு வயதில் பந்தலின் கீழே உள்ள கொம்பினைச் சுற்றி, சுற்றி
விளையாடிய நாட்கள் !!!
எட்டு வயதில் நதியா வளையல் வாங்கி அணிந்த நாட்கள் !!!
பத்து வயதில் பட்டு பாவாடை உடுத்தி, கோவிலை வலம் வந்த நாட்கள் !!!
பத்தாம் வகுப்பில் வெற்றி பெற, பதினைந்து வயதில் சாமி வலம் வருவதை,
பதினோரு மணி வரை காத்திருந்து வேண்டிக்கொண்ட நாட்கள் !!!

பதினாறு வயதில் பாவாடை தாவணி அணிந்து
வெளியில் வர வெட்கப்பட்ட நாட்கள் !!!

பதினேழு வயதில் திருவிழாவில் எனக்கு என்ன வாங்கினாய்? என்ற தோழிகளுக்கு
பரிசுப்பொருள் வாங்கித்தந்து மகிழ்ந்த நாட்கள் !!!!!

இத்தனை மகிழ்வும் திருவிழா காலங்களில் !!!!!
இராசகோபாலசுவாமி வலம் வருவது அழகோ, அழகு !!!

கடைகளை காண கண்கள் இரண்டு போதாது !!!
இன்று என் மகன் திருவிழா கடை என்றால் என்ன என்கிறான்????

எப்படி சொல்வேன், நாங்கள் இரசித்து வாழ்ந்த அந்த வசந்த காலத்தை !!!
வெயில் காலமே எனினும், நிழலாடும் எங்கள் ஊர், தேர்த்திருவிழா !!!


மனம் ஏங்கத்தான் செய்கிறது ...
எங்கள் ஊர் இராஜமன்னார்குடி, திருவிழா, திருக்கோலம்தான் ...

வளர்க திருவிழா, வாழ்க திருவிழா என வாழ்த்தும், தூரத்தில் வாழும் மன்னை மற்றும்
சுற்றுப்புற ஊர்களின் உள்ளங்கள்...

**ரூபா சரண்**
மன்னையின் மைந்தர்கள் பெண்கள் குழு

# மன்னார்குடி ரா. ராஜேஷ்

எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 2)






மணம் மயக்கும் மாலைப்பொழுது கழிந்து பனிபொழியும் முன் இரவு தொடங்க மதிமயக்கும் செண்பகப்பூ மணம் கமழ்ந்தது அந்த வனமெங்குமே...

விண்மீன்கள் பூத்திருந்த விரிந்த வானத்தை வெறித்து பார்த்தவாறு மரக்கிளையில் படுத்து இருந்தான் மாணிக்கம், அவன் எண்ணமெல்லாம் நேற்றைய காலை நிகழ்ந்த சம்பவத்திலே நிலைத்திருந்தது.

வில்லாளி இறந்ததும் அவன் யாரென்று அறிய முடியாமல் போன ஏமாற்றத்துடன் திரும்பிய தேவரை பார்த்த மாணிக்கம் எனக்கு தங்களிடம் இரண்டு என்றான். அவரோ என்ன என்பதை போல புருவம் சுருக்கி அவனை உற்றுப்பார்த்தார்.

இவ்வழி இன்னும் ஒரு காத தூரத்திற்கு இதே போல மரங்களையும் மறைவிடங்களையும் கொண்டது. வந்த நால்வரில் இருவரின் நிலை அறியவில்லை, எனவே என்னையும் கரியனையும் இந்த காடு முடியும் வரை பரிசோதிக்க அனுமதிக்க வேண்டும்.

மற்றொன்று தங்களை ஐயன் என்று அழைக்க அனுமதி வேண்டும் ஏன் என்று பின்னால் இருந்த வீரன் கேட்க...

தெரியவில்லை என் மனம் சொல்கிறது அப்படி அழைக்க, அதை அனுமதிப்பது உங்களின் விருப்பம் என்று தேவரைப் பார்த்தான்.

உன் முதல் விண்ணப்பம் ஏற்கப்பட்டது, இரண்டாவது பரிசீலிக்கப்படும் என்ற தேவர், திருமேனியை பார்த்தார்.

கையகப்படுத்திய ஆயுதங்களுடன் வேகமாய் குதிரையேறி அதன் தொடையை

தட்டினான்.

இதைப்பார்த்த கரியனும் மாணிக்கமும் ஒருவரை ஒருவர் நோக்கினர், அடுத்த கணம் காற்றில் பறப்பது போல மரம்விட்டு மரம்தாவி குறுக்கும் நெடுக்குமாய் துலாவி தேடி காட்டின் கரை தோட்டனர், ஒரு சில வினாடிகளில் குதிரைப்படை அவர்களைக் கடந்தது.

தேவர் திரும்பிப் பார்த்து புன்னகைத்தார், விரைவில் அழைப்பு வரும், தயாராயிரு! என்று உரக்க குரல் கேட்டது, குரல் யாருடையது என அனுமானிக்க முடியவில்லையே என்று சலிப்புடன் சுயநினைவிழந்த மாணிக்கத்தின் கண்கள் கரியனை தேடியது.

சலசலத்த புதரிலிருந்து வாயில் ஒரு சிறுநரியுடன் வெளியே வந்த கரியன் அதனை கீழே போட்டு முன்காலால் தட்டி எழுப்பினான், இறந்தது போல நடித்த நரியும் விருட்டென்று எழுந்து ஓடியது, அதனை பாய்ந்து பிடிப்பது போல பாவனைக் காட்டிக் கரியன் விளையாடிக் கொண்டிருந்தான்.

அதே நேரம் கம்பீரமான அந்த பழையாறை கோட்டையின் முன்புற வாசலில் வாயில் கதவருகே நீண்டுயர்ந்த தொலைநோக்கு கோபுரத்தின் மேல்தட்டில் நின்றிருந்த வீரர்கள் கோட்டையின் ராஜபாதையில் தூரத்தில் குழம்படி சத்தமும் மேலெழும்பிய புழுதி படலத்தையும் நிலவொளியில் கண்டவர்கள்.

அருகிலுள்ள கயிற்றை விட்டுவிட்டு இழுத்தார்கள். அந்த கயிற்றின் மறுமுனை கீழேயுள்ள வாயிற்காவலர்களின் அறையிலுள்ள மணியில் பிணைக்கப்பட்டிருந்ததால் மணி ஒலித்தது. வாசலின் முன்பு இடமும் புறமுமாய் இரு வீரர்கள் எதிரெதிரே நடைபோட்டு கொண்டிருந்தார்கள், அவர்கள் இளவயதினராய் இருந்தார்கள்.

அலுவலக அறையின் திண்ணையில் இரு நடுவயதுடைய வீரர்கள் ஆடுப்புலியாட்டம் ஆடிக்கொண்டிருக்க அவர்களை சுற்றி நான்கு பேர் அதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள், விளையாட்டு சூடுப்பிடிக்க இடையிடையே ஒவ்வொரு நகர்தலுக்கும் ஆஹா கோஷம் ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த அறையோ ஒரு சிறிய ஆயுத கிடங்கு போல இருந்தது, வாள், வேல், வில், அம்பு, சிறிய கோடாரி என்று அனைத்தும் வரிசையாகவும் நேர்த்தியாகவும் எளிதில் கையாலும் வண்ணம் அடுக்கப்பட்டிருந்தது.

அறையின் நடுவில் ஒரு முக்காளியும் அதன் முன்பு ஒரு சிறிய மேசையும் இருந்தது, அந்த முக்காளியில் அமர்ந்திருந்தவர் நல்ல உடற்கட்டும் முறுக்கு மீசையுமாய் மத்திய வயதை கடந்தவரை போல இருந்தார்.

தொலைநோக்கு கோபுரத்திலிருந்து இழுக்கப்பட்ட கயிறு எழுப்பிய மணி ஓசையை

கேட்ட மாத்திரத்தில் தனக்கான இடத்தில் போய் விரைப்பாய் நின்ற வீரர்கள் கையில் ஆயுதங்கள் முளைத்திருந்தது.

குதிரைகள் கோட்டையை நெருங்கும் தருவாயில் முதல் குதிரை வீரன் கையில் ஒரு கொடியை ஏந்தினான், வெள்ளை நிற கொடியில் பாயும் புலியின் படம் இருந்தது. அது வந்தியதேவருக்கும் குந்தவை நாச்சியாருக்கும் உரித்தானது என்பதை கண்ட கோபுர காவலாளி மீண்டும் வேறொரு கயிற்றை இழுத்தான். மீண்டும் அறையில் மணி ஒலித்தது, ஆனால் அதன் ஓசையிலும் ஒலிக்கும் விதத்திலும் வித்தியாசமிருந்தது.

முதலில் எழுப்பப்பட்டது எச்சரிக்கைக்கான ஒலி, அடுத்து ஒலித்தது அரச குடும்பத்தினரின் வருகையை அறிவிப்பதற்கானது.

விளக்குகளின் திரிகள் தூண்டப்பட்டு வெளிச்சம் அதிகப்படுத்தப்பட்டது, வாசலுக்கு வர வர குதிரைகளின் வேகம் குறைந்து நடக்க ஆரம்பித்தது. கோட்டை காவல் வீரர்கள் குதிரை வீரர்களை அடையாளம் கண்டு கொண்டு தலையசைத்தார்கள், வாசல் கதவு அகலமாய் திறக்கப்பட்டது.

உள்ளே நுழையும் வீரர்களுக்கு கையசைத்து வந்தியதேவருக்கு தலைவணங்கினார்கள், அவரும் பதிலுக்கு கையசைத்துக்கொண்டே உள்ளே சென்றார்.

கோட்டையின் நடுநாயகமாகவும் அழகாகவும் இருந்த அரண்மனை சுந்தர சோழருடையது, அவர் சிவபதம் அடைந்த பிறகு தற்போதைய எஜமானி குந்தவை நாச்சியார்.

அரண்மனையின் அந்தப்புரம் முதல் திறந்த வெளிமாடம் தூங்கா விளக்குகள் வெளிச்சம் குறைக்கப்பட்டு நிலவொளியால் மாடம் முழுவதுமாய் நிறைந்திருந்தது.

அறிவிற் சிறந்த அரசிளங்குமாரியும்,
மதிமுகம் கொண்ட
மங்கையர்க்கரசியுமான
குந்தவை தேவி அந்த
சாய்வான பஞ்சனையில் சாய்ந்து இருந்தாள், அவள் பார்வை அந்தப்புரத்தின் அழகான நந்தவனத்தின் அமைதியைக் குழைத்துக் கொண்டிருந்த வெள்ளைப் புறாக்களின் குடும்ப சண்டையையும் தாண்டி வெள்ளி முழுநிலவில் நிலைத்தது, நிலைத்த அந்த புள்ளி கும்பகோணத்து ஜோதிடரின் குடிலாய் மாறியது.

சாத்தியிருந்த வாயிலை பதட்டமாய் கலைத்து உள்நுழைந்த வீரனின் விழி எனும் வேல் எத்தனை ஆழமாய் என் இதயத்தை துளைத்தது. அந்த கணம் என்ன நடந்தது, என் இதயம் துடிப்பதை நிறுத்தியதா இல்லை வேகமாய் துடித்ததா, வலித்ததா? என்ன அனுபவம் அது ஆனால் அது பிடித்திருந்தது.

இப்போது கூட அவர் விழியை நேருக்கு நேர் நோக்கினால் அதே அனுபவம் பிறக்கிறதே.

என்று எண்ணியவாரே கோவைப்பழம் போல தடித்து சிவந்திருந்த உதட்டைக் குவித்து பெருமூச்சிட்டாள்.

காற்று களைத்துப் போட்ட மேலாடையை சரிசெய்த வண்ணம் எழுந்து மெல்ல நடந்து திரைசீலை மடித்து கட்டப்பட்ட தூணில் பக்கவாட்டில் சாய்ந்த வண்ணம் கையிரண்டையும் மார்பின் குறுக்கே கட்டி கொண்டு புறாவின் குடும்ப சண்டையை ரசிக்கலானாள்.

திடீரென்று ஒரு கை மெல்ல இடுப்பில் புகுந்து லாவகமாக வாரியணைத்தது, திகைத்து விரிந்த விழி இயல்பாய் தன்னிலையடைந்து அந்த அணைப்பை அவளது இடை அனுபவித்துக் கொண்டிருந்தது.

தூணிற்கு தோலை கொடுத்து சாய்ந்திருந்து அணைத்த ஒரு கைக்கு ஆதரவாக மறுகையை தேடிப்பிடித்து பிணைப்பித்தாள், இறுக்கத்தை அதிகப்படுத்த இப்போது அவள் கைகளும் இணைந்திருந்தது.

குளிர்ந்த காற்றிற்கு இது இதமாயிருந்தது, இந்த இதம் இருவருக்கும் தேவையாயிருந்தது.

செண்பகவனம் பற்றி தெரியுமா குந்தவை.

குந்தவை மெல்ல தேவரின் அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு பஞ்சணையில் அமர்ந்தாள், அவள் கண்களில் காதல் மறைந்து பெருமை பொங்கியது.

நமது சோழநாட்டில் பெருமைமிக்க ஊர்களில் செண்பகவனமும் ஒன்று அத்தான்.

ஒன்றா இரண்டா அங்கு அனைத்துமே சிறப்புதான் அவ்வூர் குடிகள் எல்லோரும் மன்னர்கள் தான் என்றாள்.

இப்படி பொதுவாக சொன்னால் எப்படி குந்தவை, விரிவாகத்தான் சொல்லேன்.

சொல்கிறேன் முதலில் இந்த பாலை குடியுங்கள் என்று அருகில் இருந்த பால்கிண்ணத்தை எடுத்து நீட்டினாள், தேவரும் வாங்கி பருகினார்.

கல்லாதவர் இல்லாத ஊர், அங்கு எல்லோர்க்கும் தமிழைப் படிக்கவும் தெரியும்,

எழுதவும் தெரியும்.

ஊர்முழுக்க குளங்களும் அதனை சுற்றி குடிகளும் அமைந்த ஊர் அது, ஒரு குளத்திலிருந்து மற்ற குளத்திற்குத் தொடர்புண்டு, பாம்பனி ஆற்றிலிருந்து வரும் தண்ணீர் எல்லா குளங்களிலும் நிரம்பி மீண்டும் ஆற்றிலே இணையும் வண்ணம் மிக நேர்த்தியான தன் மேலாண்மை கொண்ட ஊர் அது.

குந்தவை கூறுவதை கேட்டு கொண்டிருந்த வந்திய தேவர் வியப்பாய் பாம்பனி ஆறா அது காவிரி இல்லையா என்றார்.

காவிரியாறு நீராடுமங்கலத்தில் (நீடாமங்கலம்) மூன்று கிளைகளாக பிரிகிறது, அதில் ஒன்றுதான் செண்பகவனத்தை செழிப்பாக்கும் இந்த பாம்பனி ஆறு.

செண்பகவனத்தில் பாயும் இந்த ஆற்றின் கரையில் திருஞான சம்பந்தரால் பாடப்பெற்ற திருத்தலமுள்ளது. அங்கு சிவன் தான் தோன்றியாக சுயம்பாக பாம்பின் புற்று லிங்கமாய் எழுந்தருளியிருக்கிறார், பாம்பு சிவனுக்கு ஒரு அணிகலன்.

எனவே அந்த திருத்தலமும் பாம்பனி திருத்தலமென்றும் அதனை தன் தரையில் பெற்றதால் இந்த ஆறும் பாம்பனி ஆறு என்று போற்றப்படுகிறது அத்தான்.

அது மட்டுமா செண்பகவனம் வைணவத்திருக்கும் பெயர்பெற்ற ஊர், தென்னகத்து துவாரகை என்றல்லவா வைணவர்கள் போற்றுகிறார்கள், பகவான் கிருஷ்ணர் கோபாலனாய் காட்சி தந்த ஊர் என்று ஆழ்வார்கடியார் எப்போதும் சொல்வார்.

ஆழ்வாரா ஆமாம், அவர் எனது ஒற்றர் நண்பர் என்று இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர், பழைய கதைகள் நியாபகம் வந்தவர்களாய்.

அது சரி இப்போது என்ன செண்பகவனம் பற்றிய கேள்விக்கு காரணம் என்னவோ தேவரே, என்றாள் குந்தவை.

அங்கு தான் நேற்றைய விடியலில் இரண்டு முறை என் மீது கொலைமுயற்சி நடந்தது என்றும், மாணிக்கத்தைப் பற்றியும் கரியனைப் பற்றியும் எல்லா விவரங்களையும் சொல்லி முடித்தார் தேவர்.

எத்தனை கவனக்குறைவான மெய்க்காவல் படை 'திருமேனி'
என்று உரக்க குரல் கொடுத்தாள் குந்தவை.

குந்தவை அமைதியாகு நேற்று அம்படிப்பட்டு இறந்தவர் திருமேனியின் தம்பி குமணன், அவனது ஈமசடங்கு முடித்தே வந்தோம். அதனால் தான் இத்தனை தாமதம் எவ்வளவோ தடுத்தும் திருமேனி என்னை கோட்டைக்குள் பாதுகாப்பாய்

சேர்பித்துவிட்டு தான் போவேன் என்று என்னுடன் வந்துவிட்டான். இவர்கள் என் வேலைக்காரர்கள் அல்ல, எனது நண்பர்கள், உன்னை போலவே இவர்களும் என்னை கண்ணின் மணியாய் பாதுகாக்கிறார்கள்.

குந்தவையின் குரல்  கேட்டு ஓடிவந்து படியேறிய திருமேனி, வந்தியத்தேவனின் பேச்சைக் கேட்டு கற்சிலையாய் நின்றான், அவன் கண்கள் குளமாகியிருந்தது.

என்னை மன்னியுங்கள் அத்தான், இப்போதெல்லாம் அடிக்கடி பதட்டப்படுகிறேன், மாணிக்கத்தை எப்போது அழைக்க போகிறீர்கள், அவனை காண வேண்டும் போல தோன்றுகிறது. வாருங்கள் முதலில் திருமேனியை வீட்டிற்கு அனுப்பி வைப்போம்.

செண்பகவனம்:-
பிற்பகல்:-

ஒற்றை அடியில் ஒரு வீரனை கொன்ற அந்த கரும்புலி கரியன் பூக்களில் தேன் குடிக்கும் பட்டாம்பூச்சிகளை அதன் சிறகுகள் உடையாமல் பிடித்தும் விட்டும் விளையாடிக் கொண்டிருந்தான். மாணிக்கமோ மெலிந்த நீண்ட நெல்லிமரத்தை எதிரியாய் நினைத்து தேக்குகளியை வாள்போல வைத்துக்கொண்டு தாக்கியும் தடுத்தும் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தான். அவன் உள்ளுணர்வு ஏதோ உணர்த்த சட்டென சாலையை நோக்கினான். சுமார் இருபது அடி தூரத்தில் மலர்ந்த முகத்துடன் அகண்டு கைகள் விரித்த வண்ணம் மாணிக்கத்தை நோக்கி வந்தார் ஆழ்வார்க்கடியார்.

மாணிக்கமோ துள்ளி ஓடிவந்து அவரை கட்டிப்பிடித்துக் கொண்டான், சமீபத்திய இழப்போ, நெடுநாள் கழித்த சந்திப்போ காரணம் புரியாமல் வந்த மாணிக்கத்தின் கண்ணீரால் ஆழ்வாரின் தோள் நனைந்தது.

அழு மாணிக்கம் அழு, மனதின் பாரம் குறையும் வரை அழு, அழுகையை போல மனஅழுத்தம் குறையும் அருமருந்து வேறில்லையடா அழு என்று அவன். முதுகை ஆதரவாய் தடவிக் கொடுத்தார். கரியனும் இவர்களின் கால்களில் உராய்ந்துக் கொண்டு தன்பங்கு அரவணைப்பை வெளிப்படுத்தினான், நடந்தவை அனைத்தையும் உன் சின்னம்மா கூறினார். குறுகிய காலத்தில் இருவரின் மரணம் மிகுந்த வேதனை அளிக்கிறது, இறப்பில்லாத பிறப்பில்லையே மாணிக்கம் என்ன செய்ய, வா வீட்டுற்கு செல்லலாம்.

நீரியல் மேலாண்மையில்
நிகரில்லா செண்பகவபத்தின்
பெரிய குளம்
சிறிய ஏரி (நமது மன்னையின் இன்றைய தெப்பகுளம்.)

செண்பகவனத்தின் எல்லா குளத்திற்கும்  இந்த குளத்திற்கும் நீர் போக்கும் வரத்துமான

தனிவழிகள் இருந்தன..

பாம்பு அணி ஆற்றின் நீரைத் தேக்கி கோடைகாலத்தில் பயன்படுத்தியும்..
மழைக்காலத்தின் பெருவெள்ளதை வடிகால் ஆகவும் பயன்படுத்தப்பட்டது.

சுடு செங்கற்களால் சூழப்பட்ட அதன் சுற்றுச்சுவர் எங்கும் பாசன மடைகளும்.
வடிகால் மடைகளுமாய் நிறைந்திருந்தது அந்த பெருங்குளம்..
அதன் பெரும்கரைகளை ஒட்டிய பாதையில்.

சற்றே தனித்த வீடு அது பெரிய தோட்டமும் சிறிய வீடும் அகண்ட திண்ணையுமாய் இருந்தது, மாணிக்கத்தின் தாய் ஒரு மருத்துவச்சி என்பதால் அந்த திண்ணை சின்ன மருத்துவமனையாக இருந்தது, அதன் ஒரு மூலையில் சிறிய மர அடுக்கும் அதில் இலவம் பஞ்சுகள், பருத்தி பஞ்சுகள், மருந்து களிம்புகள், பருத்தி துணிகள் கூர்மையான சிறுசிறு கத்திகள் என்று எல்லாம் மருத்துவ கருவிகளாக அடுக்கப்பட்டிருந்தது.

தோட்டத்தில் பூச்செடிகளை விட மூலிகை செடிகளே அதிகமிருந்தன, மாட்டு கொட்டகையில் மாடுகள் இல்லை, வைக்கோல் போர் கோழிகளால் அளைகளிக்கப்பட்டிருந்தது.

மாணிக்கத்தின் அம்மா இருந்த காலத்தில் எப்போதும் ஆள் நடமாட்டம் உள்ள அந்த வீடு இப்போது வெறுமையாய் காட்சியளிக்கிறது.

மாணிக்கமும் ஆழ்வாரும் முன்புற முள்வேலியை திறந்து உள் நுழைந்தார்கள், அதுவரை பின்னால் வந்த கரியன் உள்ளே நுழைந்தவுடன் முன்னே ஓடி வைக்கோல் போரில் நின்றிருந்த கோழிகளை விரட்டி விளையாட ஆரம்பித்து விட்டான்.

ஆழ்வாரை நோக்கிய மாணிக்கம், சற்று பொறுங்கள் ஐயா என்று வாசலில் நிற்க வைத்துவிட்டு வேகமாய் உள் நுழைந்தான், துடைப்பத்துடன் துரிதமாய் செயல்பட்டான், ஐந்தே வினாடிகளில் சுத்தம் செய்து புதிய கோரை படுக்கையை எடுத்து வந்து அவர் எப்போதும் அமருமிடத்தில் இட போனான். ஆழ்வாரோ உள் கூடத்திலிடு மாணிக்கம் சற்று ஓய்வெடுக்க வேண்டும் என்றார். அப்படியே ஆகட்டும் என்று செய்தான்.

மாணிக்கத்தின் சின்னம்மா ஒரு இலை முடிப்புடன் உள் நுழைந்தார், இன்றைய கோபாலன் பிரசாதம் பெரும்பகுதியை உங்களுக்காக வாங்கி வந்தேன். முதலில் பசியாறிவிட்டு உறங்குங்கள் ஐயா என்று இலை முடிப்பை கொடுத்தார்.

அவள் சாப்பாட்டை பற்றி பேசிய போதுதான் ஆழ்வாருக்கு காலையிலிருந்து சாப்பிடவில்லை என்ற நியாபகமே வந்தது, முகமலர்ந்து இலைமுடிப்பை வாங்கி கொண்டு முழுவதுமாய் தீர்த்தார்.

நிறைந்த வயிருடன் நீண்ட பெருமூச்சிட்டு கையும் காலும் நீட்டி படுக்கையில் சாய்ந்தார் ஆழ்வார்.

பகலில் சுட்ட சூரியன் மறைந்து நீலவானில் நிலவு ஒளியை பரப்ப தொடங்கியது, முதல் சாமநேரத்தில் மாணிக்கம் தன் கையில் உள்ள களியால் தரையில் தட்டி கொண்டிருந்தான். உள் கூடத்தில் ஆழ்வாரோ உறக்கத்தில், கரியன் ஆழ்வாரின் உறக்கம் களையும் வண்ணம் அவர் முகத்தில் தன் வாலால் சீண்டி விளையாடிக் கொண்டிருந்தான்.

சராசரியை விட சற்று நீண்டும், கருத்தும், நல்ல உடற்கட்டுடன் வந்த இரண்டு குதிரை வீரர்கள் இங்கு மாணிக்கத்தின் வீடு எது என்று அதட்டலாய் கேட்டனர், அந்த அதட்டல் பாதி உறக்கத்திலிருந்த ஆழ்வார்க்கடியாரை பதட்டமாய் எழுப்பியது, எழுந்தவர் முதலில் கரியனை தன் வசமிருந்து பிடித்து கொண்டார். மெதுவாக கதவிடுக்கின் வழியாக வெளியே நடப்பதை கவனிக்கலானார்.

நான் தான் மாணிக்கம் நீங்கள் யார் என்று மாணிக்கமும் அதட்டலாக பதிலும் கேள்வியுமாய் அவர்களை நோக்கி நடக்கலானான். அவன் தேக்கங்களியை இடையில் செருகி அதனை பிடித்தவாறே சென்றான்.

குதிரை வீரனில் ஒருவன் கீழிறங்கி உங்களுக்கு அழைப்பு வந்திருக்கிறது என்று ஒரு மூங்கிலால் ஆன குடுவையை கொடுத்தான்.

என்ன இது என்று கேட்டுக்கொண்டே அதை வாங்கிய மாணிக்கம் அதன் அடைப்பை திறந்து உள்ளே உற்று பார்க்க முகத்தருகே கொண்டு வந்தான். சட்டென வெண்புகை அவன் மூக்கை தாக்கி உள் நுழைந்தது, மாணிக்கம் மெல்ல உணர்விழந்து சாய்ந்தான் தரையில்.

சீக்கிரம் நண்பா இவனுக்கு துணையாக ஒரு கரும்புலி இருப்பதாக கேள்வி நாம் விரைவாக இந்த இடத்தை விட்டு நகர வேண்டும். அவனை தூக்கி குதிரையில் போட்டு கொண்டு வேகமாக நம்மிடத்திற்கு போ நான் உன்னை பின் தொடர்கிறேன் என்றான் குதிரையில் இருந்த வீரன்.

இவை எல்லாவற்றையும் வீட்டிற்குள் இருந்த கரியனும் ஆழ்வாரும் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

குதிரைகள் வேகமெடுத்து வந்த வழியே திரும்பி மறைந்தது.

## பயணம் தொடரும் ...

# Play schoolம் மருத்துவமனையும்


செந்தில்குமரன்
மன்னார்குடி

ஏங்க நம்ம குழந்தைய ஸ்கூல்ல சேர்க்க கூடாது? பக்கத்து வீட்டுக்காரங்க எல்லாம் அடுத்த வருசத்துக்கு இப்பவே அட்மிஷன் போட்டுட்டாங்க.

இல்லம்மா, நம்ம குழந்தை இப்ப தான் நடக்க ஆரம்பிச்சு இருக்கு, பொறுமையா சேர்ப்போம்னு சொல்லி சமாளிப்பதற்குள், நீங்க இப்படி சொல்லுவீங்கனு தெரிஞ்சி தான் நான் அட்மிஷன் வாங்கிட்டே வந்துட்டேன், மீதி ஸ்கூல் பீஸ் மட்டும் நீங்க கட்டிடுங்க என அன்பான குரலில் சொல்லும் போது, ஒன்னும் பண்ண முடியாது. பணத்தை கட்டிட்டு உங்க குழந்தைய தினமும் கொண்டு போய் விடுர வேலைய மட்டும் தான் பார்க்க முடியும்.

இப்போதைக்கு ஒரு நல்ல தொழில் குறைந்த முதலீட்டில் அதிக இலாபத்துடன் துவங்க வேண்டும் என்று நினைத்தால் அது கஂ°அநு குஇஏநிஙிஂ° மட்டும் தான்.

குழந்தையை காரணம் வைத்து, பயமுறுத்தி, மன உளைச்சலுக்கு பெற்றோர்கள் ஆளாவது மட்டுமில்லாமல் குழந்தையின் எதிர்காலமே கேள்விக்குறியாகி விடுகிறது. அதுவும் நகரத்தில் வருடத்திற்கு குறைந்தபட்சம் ரூ. 30,000 பள்ளிக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

இந்த முப்பதாயிரத்தை வைத்துக் கொண்டு, அந்த கடூச்தூ குஞிடணிணிடூ கற்றுக் கொடுப்பதைக் காட்டிலும் மிக அதிகமாக பெற்றோர்களாகிய உங்களால் வாழ்க்கைக் கல்வியைக் கற்றுக் கொடுக்க முடியும்.

முப்பதாயிரமென்ன, ஐம்பதாயிரம் கூட செலவழிக்கிறேன், ஆனால் குழந்தையுடன் செலவழிக்க நேரமில்லையே என்று சொன்னால் என்ன செய்வது? குழந்தையின் வளர்ச்சியை ஒவ்வொரு நொடியும் ரசியுங்கள், ஓடி ஓடி உழைப்பதெல்லாம் உங்கள் குழந்தைகளுக்காக மட்டுமே.

வருடத்திற்கு ஒரு முறை அனாதை அல்லது முதியோர் இல்லங்களுக்கும், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மருத்துவமனைக்கும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நீண்ட தூர பயணங்களும் சென்று வாருங்கள். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஒரு புத்தகத்தையாவது வாங்கி வீட்டில் படிப்பதற்காக வையுங்கள். மாதம் ஒரு முறை மௌன விரதமும், வாரத்திற்கு ஒரு முறை உங்கள் வீட்டு கழிவறையையும் சுத்தம் செய்ய சொல்லுங்கள். தினம் ஒரு முறை மூதாதையர்களை நினைக்க சில நிமிடங்களை ஒதுக்க சொல்லுங்கள் என்று ஒரு கவிஞர் கூறியது தான் ஞாபகத்துக்கு வருகிறது.

படிக்க வையுங்கள், பள்ளிக்கூடத்திற்கு அனுப்புங்கள் ஆனால் படிக்க வைப்பதற்காகவும், பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதற்காகவும் மட்டும் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளாதீர்கள். பிறகு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்காகவே உழைக்க நேரிடும்.

இரா. செந்தில் குமரன்
மன்னார்குடி

---

# கானல் நீராச்சு

வரப்புகள்
தகர்த்து
குடியிருப்புகளாச்சு...

காவிரி வழிந்தோடும்
கால்வாயெல்லாம்
சாக்கடை வடிகாலாச்சு ...

தொண்டைத்தாகம்
தீர்க்க தண்ணீருக்கே
ஏங்குதலாச்சு ...

குடிநீருக்கே
ஐநூறு அடி தேடலாச்சு ...

எவ்வளவு மழை
பெய்தாலும்
கடலில் கலக்கவிட்டாச்சு ...

அணை கட்டுவது இங்கு
அரசியல் வாக்குறுதியாச்சு ...

மலைகள் தகர்த்து - இங்கே
நெகிழிக்குப்பைகள்
மலைகளாச்சு ...

காவிரி நீர் இப்ப
அரசியலாச்சு ...
கிடைப்பது இங்கே
அரிதாச்சு ...

கடும் வெயிலில்
கண்டனம், பேரணி
நிதம் நடத்தியாச்சு ...

தொண்டைத்தாகம்
தீர்க்க தண்ணீர் இங்கே
கானல் நீராச்சு ...



முனைவர் வ.சிவகுமார்
சுந்தரக்கோட்டை

99763 71747 / vasiva1711gmail.com

# களவாடப்படும் காவிரி



இராசசேகரன் மன்னை

அது என்ன களவாடப்படும் காவிரி என்கிறீர்களா?

எப்படி ஓடும் ஆறுகளை களவாட முடியும் என்று சிந்திக்கிறீர்களா?

அப்படி களவாடினால் இந்த சனநாயகமும் சட்டமும் அனுமதிக்குமா என்று ஆழமாக நம்புகிறீர்களா?

அனைத்தையும் கடந்து அப்படி காவிரியை களவாடுவதன் மூலம் என்ன பெரிதாக அடைந்துவிட போகிறார்கள் என்று சந்தேக்கிறீர்களா?

இல்லை மிகைப்படுத்தப்படுவதாக உணர்கிறீர்களா?

நீங்கள் எப்படி எடுத்துக் கொண்டாலும் கடந்த காலமும், நிகழ்காலமும், இவற்றின் நீட்சியாக மட்டுமே இருந்தால் எதிர்காலத்திலும் காவிரி களவாடப்பட்டு பல்லாயிரம் ஆண்டுகள் பழமைக் கொண்ட தமிழர் நிலம் வறண்டு சிதைந்து அழிக்கப்படும் ஆனால் இத்தனை சூழ்ச்சிகளையும் செய்பவர்களின் பொருளாதாரம் தமிழர் நிலத்தின் கீழிருக்கும் கனிம வளங்களை அபகரிப்பதன் மூலம் வளமாக்கப்படும் என்பதே நிதர்சனமான உண்மை. அதேநேரத்தில் காளையை மீட்க பண்பாட்டு படை அமைத்து சல்லிக்கட்டை மீட்க தமிழர்கடலில் இணைந்து அறவழியில் ஆண்கள், பெண்கள், இளையவர்கள், முதியவர்கள், என்று எந்த பாகுபாடுமின்றி அனைவரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி தலைமைகளே இல்லாமல் ஒவ்வொருவரும் சுய ஒழுக்கத்தோடு எப்படி தமிழரின் தலைமை பண்பை உலக அரங்கிற்கு வெளிப்படுத்த தைப்புரட்சியை முன்னெடுத்தோமோ அதேபோன்று பண்பாட்டை வளர்த்தெடுத்த நாகரீக தொட்டிலின் தாய்மடியான காவிரிப்படுகையை மீட்டெடுக்க மொத்த தமிழரினமும் இணைந்து காவிரி கலகத்தை முன்னெடுத்தால் தமிழர் நிலத்தை காப்பது உறுதி.

இதுநாள் வரையிலும் நமது வலிமையை நாமே அறியாமல் காவிரி உரிமையை இழந்ததால் உழவர் வாழ்வியல் சிதைந்து வருகிறது. தற்சார்பு பொருளாதாரம் தகர்க்கப்படுகிறது. உள்ளூர் பணப்புழக்கம் மலிந்துக் கொண்டிருக்கிறது. நிலத்தடி நீர் உப்பு கலந்து சிறுநீரக சிக்கல்களை கொடுக்கிறது. எதிர்கால சந்ததிகளின் தண்ணீர் தேவை கேள்விக்குறியாகிறது. இப்படி தமிழ்நாடு அனைத்து வகையிலும் காவிரி நீரின்றி அழிந்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையிலும் காவிரி உரிமையை கொடுப்பதற்கு இந்திய ஒன்றியத்திற்கு மனமில்லை. காவிரித்தாய் நமது கண்முன்னே களவாடப்படுகிறாள், கேட்க நாதியற்று தமிழரினம் தவிக்கிறது.

எத்தனை ஆண்டுகால போராட்டம், எத்தனை இழப்புகள், அனைத்தையும் ஏற்றுக்கொண்டு இன்று கொடுப்பதாக கூறிய 177.25 ஆ மி க நீரை கூட சரியான முறையில் கொடுக்க வழிவகை செய்ய மறுப்பது எவ்வளவு பெரிய தமிழரின ஒதுக்கல் நடவடிக்கை. இந்த இந்திய ஒன்றியத்தில் பல தேசிய இனங்கள் இணைந்து ஒரு அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றனர். இதில் அந்த அரசியலமைப்பு சட்டம் அனைவருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். பொதுவானதாக இல்லை என்ற மனநிலை தேசிய இன மக்களுக்கு வந்துவிட்டால் இணைந்திருப்பதில் தான் குழப்பம் ஏற்படும் அந்த சூழ்நிலையை தான் ஒன்றிய அரசு உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இதன் பாதிப்புகளை அறியாமலே அசட்டு துணிச்சலில் இந்த விடயத்தை அணுகுகின்றது. அசட்டு துணிச்சல் பலநேரம் சிறு முன்னேற்றத்தைக் கொடுத்தாலும் சிலநேரம் அழிவின் விளிம்பிற்குக் கொண்டு சென்றுவிடும்.

காவிரி உரிமையை ஆண்டாண்டு காலமாக நாம் இழந்தே வருகிறோம். இங்கிருக்கும் அரசியல் சூழ்நிலைகளை பயன்படுத்திக் கொண்டு இந்திய அரசு கர்நாடகாவையும் தமிழ்நாட்டையும் மோதவிட்டு ஒருதலைபட்சமாக கர்நாடகத்தின் பக்கம் நின்று காவிரியை களவாட அனைத்து உதவிகளையும் செய்துள்ளது. களவாடுவது என்பது அடுத்தவர் பொருளை எடுப்பது மட்டுமல்ல, அடுத்தவருக்கு கிடைக்க வேண்டியதை தடுத்து தனதாக்கிக் கொள்வதும் களவாடுவது தான். அதை தான் காவிரி விவகாரத்தில் கர்நாடகம் செய்கிறது. ஆற்று நீர் உரிமை என்பது கடைமடைக்கே சொந்தம் என்ற நியதியை மறுத்து காவிரியின் குறுக்கே சட்டத்தை மீறி பல அணைகள், தடுப்பணைகளை கட்டியும் அதன் வழியாக பாசனப்பரப்புகளை அதிகரித்தும், நமது உரிமைகளை மறுத்து அதேநேரத்தில் அவர்களின் பொருளாதாரத்தையும் வளர்த்து கொள்கிறது. இதில் நடுநிலையாக இருந்து கடைமடையான தமிழகத்திற்கு காவிரி நீரை பெற்று தரவேண்டிய இந்திய ஒன்றியம் தொடர்ந்து கர்நாடகத்தை வளர்த்துவிட்டு தமிழகத்தை வஞ்சிப்பதோடு தமிழகத்தை கர்நாடகம் பகைநாடாக கருதும் அளவிற்கு கருத்தியலையும் இன்றுவரை விதைத்து வருகிறது.

உலகின் மிகப்பெரிய சனநாயக நாடு, அதுவும் அரசியலமைப்புச் சட்டத்தின் வழியே நடக்கின்ற நாடு. சட்டங்களை மீறி செய்யுமா என்றால் செய்கிறது என்பது தான் உண்மை. இதைத்தான் நாம் கண்கூடாக காண்கிறோம், அதற்காக தினம்தினம் போராடியும் வருகிறோம். காவிரி வழக்கில் உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பில் கர்நாடகம் தமிழகத்திற்கு 192 ஆமிக என்ற அளவில் இருந்து 14.75 ஆமிக நீரை குறைத்து 177.25 ஆமிக ஆண்டுதோறும் வழங்கவேண்டும் என்ற மாறுதலோடு காவிரி நடுவர் மன்றம் கொடுத்த தீர்ப்பை ஆறு வாரத்தில் அமல்படுத்த வேண்டும். அதற்கு உரிய திட்டத்தை அறிவிக்க வேண்டும் என்று கூறியதோடு இதில் எக்காரணம் கொண்டும் மேல்முறையீடு கிடையாது. அப்படியே மேல்முறையீட்டிற்கு யார் வந்தாலும் அதனை தள்ளுபடி செய்வோம் என்று ஆணித்தரமாக கூறியது. அதன்படி உச்ச நீதிமன்றம் கூறிய ஆறாவது வாரம் மார்ச் 29 ம் தேதியோடு முடிந்த நிலையில் மார்ச் 30 ம் தேதி காவிரி பங்கீட்டில் திட்டம் என்பதன் விளக்கம் வேண்டும் என்றும்

மேலும் கர்நாடக தேர்தல் வருவதால் இதனை செயல்படுத்துவதில் சட்ட ஒழுங்கு சிக்கல் வரும் என்பதால் மே 15 ம் தேதி வரை அவகாசம் வேண்டும் என்று கோரியுள்ளது.

இத்தனைக்கும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் தன்னுடைய முதல் தீர்ப்பில் கூறியபடி எக்காரணம் கொண்டும் மேல்முறையீடு கிடையாது என்பதை அவர்களே குப்பைத்தொட்டியில் வீசிவிட்டு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதோடு காவிரி மேலாண்மை வாரியம் என்று கூறவில்லை, ‘திட்டம்’ என்று தான் கூறியுள்ளோம் அதனால் மே 3 ம் திகதிக்குள் அதற்கான திட்டவரைவு ஒன்றை இந்திய ஒன்றிய அரசு தாக்கல் செய்யவேண்டும் என்று கூறி இந்திய ஒன்றியம் கேட்ட காலநீட்டிப்பிற்கு மறைமுகமாக தனது உதவியையும் விசுவாசத்தையும் காட்டியுள்ளது.

கர்நாடக தேர்தலை ஒட்டி காலநீட்டிப்பு இந்திய ஒன்றிய அரசிற்கு தேவை எனில் அதை மட்டுமே குறிப்பிட்டிருக்க வேண்டும் ஆனால் இவர்களின் நோக்கம் அதுவல்ல, அவர்களை பொறுத்தவரை காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக்கூடாது அதற்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் கிடைக்க கூடாது. அதனை மையப்படுத்தியே இந்த மேல்முறையீடு. அதற்கு தகுந்தாற்போல் உச்ச நீதிமன்றமும் இலாவகமாக திட்டம் என்பதற்கு விளக்கம் கொடுக்காமல் காவிரி மேலாண்மை வாரியம் இல்லை, இந்திய அரசு விரும்புகிற திட்டவரைவை கொடுக்க வேண்டும் என்று சட்ட விளையாட்டை அசுரத்தனமாக விளையாடுகிறது.

இதில் நாம் தெளிவடைய வேண்டியது இந்த இடத்தில் தான். இந்த திட்டம் என்ற வார்த்தை எங்கிருந்து வருகிறது என்பதையும், அதோடு எப்படி காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் ஒழுங்காற்று குழுவும் இணைக்கப்படுகிறது என்பதை தான் நாம் உணர வேண்டும். 1956 ல் இயற்றப்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள ஒரு திட்டம் வகுத்து செயல்படுத்திக் கொள்ளலாம் என்று கூறுகிறது. இந்த திட்டம் என்ற அடைப்படையில் தான் காவிரி நடுவர் மன்றம் தனது அறிக்கையில் காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி ஒழுங்காற்று குழு அமைத்து 192 ஆமிக நீரை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. இதன் மேல்முறையீட்டு வழக்கில் தான் 177.25 ஆமிக என்று அளவை குறைத்ததோடு எந்த திட்டத்தை வேண்டுமானாலும் வகுத்துக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறுகிறது.

இந்த இடத்தில் காவிரி நடுவர் மன்றம் எதன் அடிப்படையில் காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி ஒழுங்காற்று குழு அமைக்க பரிந்துரைக்கிறது என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். நடுவர் மன்றம் மேலோட்டமாக இந்த தீர்வை கொடுக்கவில்லை. ஏற்கனவே நடைமுறையில் வெற்றிகரமாக உள்ள பக்ரா பியாஸ் மேலாண்மை வாரியத்தை மேற்கோளிட்டே இதனை கூறுகின்றனர். 1960 ல் பாகிசுதான் மற்றும் இந்தியா இடையே சிந்து நதிநீர் சிக்கலை தீர்த்துக்கொள்ள ஒப்பந்தம்

கையெழுத்தான போது சட்லெஜ், பீயஸ் மற்றும் ரவி ஆகிய மூன்று கிழக்கு ஆறுகளின் தண்ணீரை இந்தியா பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஒப்பந்தமானது.

இந்த ஆறுகளில் வரும் தண்ணீர், இமாச்சல பிரதேசத்தின் பிலாஸ்பூர் மாவட்டத்தில் உள்ள பக்ரா அணையிலும், பஞ்சாப் மாநிலத்தில் உள்ள பியாஸ் அணையிலும் சேமித்து வைக்கப்படுகிறது. பக்ரா, பியாஸ் அணைகளில் சேமித்து வைக்கப்படும் தண்ணீரை தான் பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம், சண்டிகர், டெல்லி ஆகிய மாநிலங்களின் விவசாயத்துக்கும், குடிநீருக்கும் ஆதாரமாக உள்ளது. இதனை இந்த மாநிலங்கள் பகிர்ந்து கொள்ள வடிவமைக்கப்பட்ட வாரியமே பக்ரா பியாஸ் மேலாண்மை வாரியம். கர்நாடகத்திடம் இருந்து இத்தனை போராட்டங்கள் நடத்தியும் நம்மால் காவிரி நீரை பெற முடியவில்லை. ஆனால் இத்தனை மாநிலங்கள் எந்த சத்தமுமின்றி நீரை பகிர்ந்து கொள்வதோடு வளமாகவும் வாழ்கின்றன. அதிலும் இமாச்சல பிரதேசம் இயற்கை அழகோடும் பஞ்சாப் கோதுமையின் சின்னமாகவும் மக்கள் நெருக்கடி மிகுந்த தில்லி தனது தண்ணீர் தேவையும் பூர்த்தி செய்துக் கொள்கிறது.

இதற்கு அடிப்படை காரணம் பக்ரா அணையும் பியாஸ் அணையும் மேலாண்மை வாரியத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இந்த வாரியம் மாநிலங்களுக்கிடையில் அனாவசியமான பேச்சுவார்த்தை இல்லாமல் உரிய நீரை சம்மந்தப்பட்ட மாநிலத்திற்கு உரிய காலத்தில் பிரித்து கொடுக்கும் தன்னாட்சி அதிகாரத்தை பெற்றுள்ளது. இதுவரை எந்த சிக்கலும் இல்லாமல் பக்ரா பியாஸ் மேலாண்மை வாரியம் செயல்பட்டு கொண்டிருக்கிறது. இதே திட்டத்தை செயல்படுத்துங்கள் என்று கூறுவதற்கு உச்ச நீதிமன்றத்திற்கு என்ன தயக்கம்? இதில் செயல்படுத்துவதில் ஏதும் சிக்கல் இருந்தால் அல்லது இத்திட்டம் தோல்வியானது என்றால் மாற்றைத் தேடலாம். இரண்டும் இல்லாத நிலையில் நியாயமான தீர்ப்பு என்றால் காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் ஒழுங்காற்று குழுவை அமைக்க வேண்டும் என்று தானே தீர்ப்பு இருக்க வேண்டும். மேலும் வாரியத்தில் எத்தனை உறுப்பினர்கள் இருக்க வேண்டும் அவர்களின் கல்வி தகுதி என்ன அவர்களுக்கான ஊதியம் எவ்வளவு அவர்களின் பணி காலம் எவ்வளவு என்ற அனைத்தையும் காவிரி நடுவர் மன்றம் தெளிவாக கூறியுள்ளது இதனை செயல்படுத்த சொல்வதில் உச்ச நீதிமன்றத்திற்கு எங்கிருந்து தயக்கம் வருகிறது என்பதே இவர்கள் மீதான நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகிறது. அதேநேரத்தில் தலைமை நீதிபதி தீபக்மிஸ்ரா மீது சந்தேகம் வருவதற்கு நிறைய காரணிகள் உள்ளது.

இவரின் மீது சக நீதிபதிகளே சந்தேகத்தை எழுப்பும் போதும் இந்தியாவின் நாடாளுமன்றத்திலுள்ள எதிர்கட்சிகள் எல்லாம் இணைந்து தீபக்மிஸ்ரா ஆளுங்கட்சிக்கு ஆதரவாக செயல்படுவதாக எங்களுக்கு சந்தேகம் வருகிறது. ஆகையால் அவரை திரும்ப பெறவேண்டும் என்று கையெழுத்து வாங்கி வருகின்றனர் என்பது தனிக்கதை. இவர்களுக்கே இவ்வளவு சந்தேகம் வருகிறது என்றால் சாமானியனான நமக்கு வருவதில் வியப்பேதும் நமக்கில்லை.

அதே சந்தேகத்தோடு இந்திய அரசு இந்த சிக்கலை எப்படி அணுகப்போகிறது என்று சிந்தித்தால் ஏற்கனவே அவர்கள் செய்தியை கசியவிட்டது போல காவிரி மேற்பார்வை குழு என்ற திட்டவரைவை சமர்ப்பிக்கப் போகிறது, அதனை உச்ச நீதிமன்றமும் ஏற்கப்போகிறது என்று தான் தோன்றுகிறது. அந்த குழு மேற்பார்வை செய்து நீரைக் கொடுக்க வேண்டும் என்று கூறும் கர்நாடகம் வழக்கம் போல எங்களுக்கே நீரில்லை என்று கூறும் மீண்டும் ஒரு பத்து ஆண்டுகள் வழக்கு நடக்கும். இரண்டு மாநிலமும் பகைமை பகுதியாக உருவெடுக்கும். தமிழரினத்தை பொறுத்தவரை சனநாயகத்தின் நான்கு தூண்களும் நமக்கு எதிராகவே இருக்கின்றன. இதிலிருந்து காப்பாற்றும் வலுவான ஆட்சியும் எதிர்கட்சியும் நம்மிடம் இல்லை. அழுத்தமான போராட்டங்களை முன்னெடுத்து ஓரளவிற்கு நமக்கு நம்பிக்கை கொடுப்பது சிறுசிறு இயக்கங்களும் கட்சிகளும் மட்டுமே.

ஏன் அனைவரும் இணைந்து காவிரியை நமக்கு மறுக்க வேண்டும். காவிரி நீர் வந்தால் விவசாயம் நல்ல முறையில் நடக்கும். உள்ளூர் பொருளாதாரம் வளரும். நிலம் இயற்கை பாதுகாப்போடு பருவமழை நன்முறையில் பெய்து வளமான பூமியாக இருக்கும். அனைவரும் தன்னிறைவான வாழ்க்கையை வாழ்வார்கள். அப்படி வாழ்ந்தால் எப்படி இந்த மண்ணைவிட்டு வெளியேறுவார்கள். எப்படி மீத்தேன் ஹைட்ரோ கார்பன் உள்ளிட்ட இயற்கை எரிவாயுகளையும் நிலக்கரி உள்ளிட்ட கனிம வளங்களையும் எடுத்து விற்பது. ஆமாம் தமிழர்கள் ஒவ்வொருவரின் காலின் கீழும் பல்லாயிரம் கோடி மதிப்பிலான கனிம வளங்கள் நிறைந்திருக்கிறது.

அதனை தன்னுடைய முதலாளிகளுக்கு எவ்வளவு விரைவாக தாரைவார்க்க முடியுமோ அவ்வளவு விரைவாக கொடுத்துவிட வேண்டும். காரணம் ஐரோப்பா பிரான்சு போன்ற நாடுகள் இதுபோன்ற இயற்கை எரிவாயுகளை தவிர்த்துவிட்டு மாற்றுவழி எரிசக்திகளை பயன்படுத்தும் திட்டத்திற்கு வந்துக்கொண்டிருக்கின்றன. இன்னும் பத்து பதினைந்து ஆண்டுகளில் உலக நாடுகளில் இந்த இயற்கை எரிசக்தியின் சந்தை முடிவுக்கு வந்துவிடும். அப்படி முடிவுக்கு வந்துவிட்டால் இதனை வீணாக விண்ணில் எரிய விடவேண்டிய நிலையே ஏற்படும். அளவுக்கு அதிகமான எரிவாயுகளை எரியவிட்டால் சுற்றுச்சூழல் சீர்கேடு ஏற்பட்டு இமயமலை போன்ற பனிமலைகள் உருகி கடல் பரப்பே இல்லாமல் இயற்கை சமச்சீர் அழிந்து மொத்த நாடும் அழிந்து போகும். சரி அதற்கு ஏன் இயற்கை எரிவாயுவை வெளியேற்ற வேண்டும், அதனை அப்படியே விட்டுவிடலாமே என்று உங்களுக்கு தோன்றலாம் ஆனால் அப்படி விடமுடியாதே.

காரணம் இந்த இயற்கை எரிவாயுவின் சந்தை மதிப்பை காட்டிலும் பல்லாயிரம் மடங்கு கனிமவளங்கள் தமிழர் நிலத்தின் கீழாக உள்ளது. இதனை எடுத்து பணமாக்க வேண்டுமெனில் அதற்கு இந்த எரிவாயுவை வெளியேற்ற வேண்டும். மேலும் இயற்கை எரிவாயுவை எடுக்க பயன்படுத்தப்படும் நீரியல் விரிசல் முறையால் இயல்பாகவே இங்கு மக்கள் வாழ தகுதியற்ற நிலமாக மாறி வாழ்விடத்தைவிட்டு வெளியேறும் நிலை ஏற்படும். அப்படி மக்கள் வெளியேறிவிட்டால் நெய்வேலி போன்று திறந்தவெளியில் கனிம வளங்களை எடுக்க எளிதாக இருக்கும்.

இவ்வளவு அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட மண்ணில் அவர்களை வெளியேற்றுவது எவ்வளவு சிரமம் என்பது முதலாளிகளுக்கு தெரியாதா என்ன? அதனால் தான் தாமாகவே வெளியேறும் சூழ்நிலையை உருவாக்குகிறார்கள். ஒரு அரசே இதனை செய்யுமா என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம். ஒருமுறை உங்களை நீங்களே சுற்றிப்பாருங்கள். இந்த அரசு உங்களுக்காக எதையும் செய்யவில்லை என்பதும் அனைத்திலும் ஒரு முதலாளியின் வளமான வாழ்க்கை இருக்கிறது என்பதும் நன்றாக புரியும். மேலும் நீங்கள் விபத்தில் இறந்துவிட்டாலோ அல்லது அரசின் அலட்சியத்தால் உங்களுக்கு உயிரிழப்பு ஏற்பட்டாலோ உங்களுக்கு ஒரு இழப்பீடு வழங்குவார்கள். அது மூன்று இலட்சம் முதல் பத்து இலட்சம் வரையிலும் இருக்கலாம்

ஆனால் அதை விட பல்லாயிரம் கோடி பணமதிப்பு உங்கள் காலுக்கு கீழ் மண்ணில் புதைந்திருக்கிறதே. அதை எப்படி அவர்கள் இழக்க விரும்புவார்கள். தற்போது உங்கள் மனத்தராசில் உங்கள் உயிரையும் பல்லாயிரம் கோடி பணத்தையும் வைத்து பாருங்கள் நீங்களே கோடியின் பக்கம் சரிந்து அதில் புதைந்து போவீர்கள். அந்தளவிற்கு பொருளாதாரம் புதைந்திருக்கிறது. ஆனால் அதனை கடந்த பொருளாதரம் மண்ணிற்கு மேல் மணிகளாக வருகிறது என்பது இந்த அறிவிழிகளுக்கு புரிவதில்லை. காரணம் இவர்கள் முதலாளிகளின் வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி என்றும் அவர்கள் கொடுக்கிற தரகு பணமே தங்களின் வளர்ச்சி என்றும் ஆழமாக நம்புகின்றனர். சனத்தொகை அதிகம் கொண்ட நாட்டில் தனிமனித வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சியாக இருக்க முடியும் என்பதை இவர்களுக்கு எங்கிருந்து விளக்குவது.

இதற்கிடையில் இன்னொரு விடயத்தையும் இதனூடாக பார்க்க வேண்டும். தமிழ்நாடு சிறுகச்சிறுக இராணுவ தளமாக மாற்றப்படுகிறது. அதன் கூறுகளே நீயூட்ரினோ, சாகர்மாலா மற்றும் இராணுவ தளவாட உற்பத்தி பொருட்கள் மையம் என்று ஆக்கிரமிக்க தொடங்குகிறது. நாளை நீயூட்ரினோ ஆராய்ச்சியின் விடை ஆயுதமாகவும் உருவெடுக்கலாம். அதுபோல கடற்கரைகளை மாலையாக இணைக்கும் சாகர்மாலா திட்டம் தனது கடல் வழிகளை இராணுவ தளமாக உருவெடுக்கவே என்பதை உணர்த்த பல சான்றுகளும் நகர்வுகளும் உணர்த்துகின்றன. மேலும் இந்த வருட நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டில் இராணுவ தளவாட உற்பத்தி பூங்கா அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னோட்டமாக தான் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியில் பிரதமர் இராணுவ தளவாட கண்காட்சியை பார்வையிட்டு சென்றுள்ளார். இந்த இராணுவ தளவாட பூங்காவும் கல்பாக்கம் அணுமின் நிலையம் வரை நீழ்கிறது. இதுவும் அணு ஆயுத தயாரிப்பும் இவர்கள் திட்டத்தில் இருக்கலாம் என்ற பெருத்த சந்தேகத்தை நமக்கு ஏற்படுத்துகிறது.

இவ்வளவு சிக்கலையும் நமக்கு கொடுக்க அப்படி என்ன தேவை உள்ளது என்று தோன்றலாம். பல்லாயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து வரும் ஆரிய தமிழர் இனப்பகை போர் தொடர்ந்து கொண்டே வருகிறது. நாமும் காலத்திற்கு ஏற்றார்போல நம்மை

தகவமைத்துக் கொண்டு ஆரியத்திடம் இருந்து நம்மை தற்காத்து வருகிறோம். இதுநாள்வரை மொழி பண்பாட்டு ரீதியில் இருந்த இவர்கள் எதிர்ப்பு, இன்று தமிழரின அழிப்பு என்ற எல்லையில் வந்து நிற்கிறது. அதனால் நிலத்தை அழித்து அவர்களையும் வளர்த்து கொண்டு நம்மையும் அழிக்க துடிக்கிறார்கள். இவ்வளவு வன்மமா இருக்கும் என்று நினைக்கிறீர்களா? தவறில்லை, உலக அரங்கில் இந்து இந்தியாவின் பண்பாட்டு முகமாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்த இந்து தமிழர்களின் சைவ, வைணவ வாழ்வியல் கோட்பாடுகளில் இருந்து கட்டமைக்கப்பட்டுள்ளது. அதற்கு சாட்சியாகவே சைவ, வைணவ குறிப்புகளை தாங்கிய அனைத்து தளங்களும் தமிழகத்தின் எல்லைக்கு உட்பட்டே இருக்கிறது. அதேபோன்று உலகின் மூத்த குடி தமிழ் குடி என்ற வரலாறும் ஆரியர்களின் கட்டமைப்பு மீதான நம்பகத்தன்மையை சிதைக்கிறது. உலகின் மூத்தகுடி என்கிறீர்கள் அதற்கான காரணத்தை தான் எவரும் ஏற்பதில்லையே என்று தோன்றலாம். எவரும் ஏற்காததால் உண்மை பொய்யாகிவிடாது.

இருந்தாலும் அனைவரும் ஏற்பதை கூறுகிறேன். காவிரியை களவாடி தமிழர் நிலத்தை அழித்து அவர்கள் எடுக்க துடிக்கின்ற இயற்கை எரிவாயு, நிலக்கரி உள்ளிட்ட கனிம வளங்கள் தான் உலகின் சுத்தமான வளங்கள் என்று ஆய்வுகள் கூறுகிறது. உலகின் மிகச்சுத்தமான கனிம வளங்கள் நிறைந்திருக்கிறது என்றால் இது மண் எவ்வளவு பண்பட்ட மண்ணாக இருக்க வேண்டும். இந்த அளவிற்கு பண்படுகிறது என்றால் மக்கள் எத்தனை ஆயிரம் காலங்களாக இங்கே வாழ்ந்திருக்க வேண்டும். அதனால் தான் தமிழர் நிலத்தை அழிக்க இவ்வளவு தீவிரம் காட்டுகிறார்கள்.

இவ்வளவு ஆபத்துகளுக்கு மத்தியில் வாழ்கிறோம். நம்மை காப்பாற்றிக்கொள்ள வழியே இல்லையா, இத்தனை பாரம்பரியமான இனமும் நிலமும் நமது காலத்தில் நமது இயலாமையில் அழிந்துவிடுமா, இதிலிருந்து நம்மை மீட்டெடுப்பதற்கு வழியே இல்லையா என்று அச்சம் ஏற்படலாம். அச்சத்தை மனதி(தீ)ல் வைத்து எரியுங்கள் அந்த வெப்பத்தைச் சிந்தனையிலும் செயல்பாட்டிலும் விதையுங்கள் எந்த அதிகாரமும் இல்லை என்றாலும் நம்மை நாமே காத்து நமது நிலத்தில் வேரூன்றி நிற்கலாம். அதற்கு நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். எந்த விலை கொடுத்தாவது காவிரியை மீட்டெடுக்க வேண்டும்.

அதற்கு வீட்டிற்கு ஒருவர் வீதிக்கு வரவேண்டும் வந்தவர்கள் வராதவர்களை இந்த செய்திகளை அறியாதவர்களை விழிப்புணர்வு ஏற்படுத்தி அழைத்து வரவேண்டும். அனைவரும் அனைத்து தளங்களிலும் விழிப்புடன் செயல்பட வேண்டும். ஊடகவியலாளர்கள் தங்கள் பணியை இந்த மண்ணை மீட்டெடுக்க பயன்படுத்த வேண்டும். அனைத்து மக்களுக்கும் அனைத்து தகவல்களையும் கொண்டு சேர்க்க வேண்டும். மக்கள் மனதில் மண் மீதான பற்றையும், இதை காப்பாற்றும் வழிமுறையையும் வேகமாக விதைக்க வேண்டும்.

இளைஞர்கள் மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தை பாதிக்காத வகையில் தினமும் இரண்டு மணிநேரமாவது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த செயல்பட வேண்டும். சமூக வலைதளங்களை சமூகத்தை பாதுகாக்கும் கருவியாக மட்டுமே இருக்கும் வகையில் பொறுப்புணர்வோடு பயன்படுத்த வேண்டும். எங்கு, எந்த போராட்டம் நடந்தாலும் பங்கெடுக்க வேண்டும். எவரிடம் பேசினாலும் நம்மை நாமே காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அரசு மற்றும் தனியார் துறையில் பணியில் இருப்பவர்கள் தாங்கள் இருக்கும் தளத்திலிருந்து இந்த போராட்டத்தில் எந்த வகையில் பங்களிக்க முடியுமோ அந்த வகையில் பங்களிக்க வேண்டும்.

சட்டத்துறையில் இருப்பவர்கள் அரசின் கொள்கை முடிவுகள் சட்டத்திருத்தங்கள் இதிலிருந்து நம்மை தற்காத்து கொள்ளும் சட்ட வழிகள் என்று அனைத்து வகையிலும் தங்களது பங்களிப்பை செலுத்த வேண்டும். இத்தனை காலம் எசமானர்களுக்கு மட்டுமே விசுவாசமாக இருந்தவர்கள் இனிமேல் மண்ணிற்கும் மக்களுக்கும் விசுவாசமானவர்களாக இருக்க வேண்டும். இந்த களத்திலிருந்து எவரும் தன்னை விலக்கி கொள்ள கூடாது அப்படி இருப்பவர்களை மற்றவர்கள் அனுமதிக்க கூடாது. உடனிருந்து துரோகம் செய்பவர்களை எச்சரிக்கையாக அணுகி களத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். அனைவரும் தங்கள் செயல் சிந்தனை வாழ்க்கை என்று அனைத்தையும் மண்ணுக்கானதாக மாற்றிக்கொண்டு அதன் வழியாகவே தங்கள் வாழ்க்கையை வாழ பழகிக்கொள்ள வேண்டும்.

இதனால் மட்டும் ஆபத்திலிருந்து மீண்டுவிட முடியுமா என்று நினைக்க வேண்டாம். முதலில் இதனை சரியாக செய்வோம், மற்றவை இயல்பாக நடக்கும். ஆட்சி, அதிகாரம் ,ஊடகம் மற்றும் நீதித்துறை என்று இந்த விடயத்தில் நம்மை கைவிட்டுவிட்டது. ஆனால் இவையெல்லாம் மக்களாகிய நம்மை இணைக்கும் கருவி தானே தவிர நம்மை இயக்கும் கடவுள் இல்லை. இந்த சனநாயக தூண்களுக்கு மக்களாகிய நாம் தான் கடவுள். நம்மை இணைக்கும் கருவி பழுதானால் கடவுளாகிய நாம் தான் அதனை சீர்செய்ய வேண்டும். இன்றிலிருந்து முடிவெடுத்து களம் அமைப்போம் காவிரியை மீட்போம். அதன் பிறகு இருக்கிற நீர்நிலைகளை நமது முன்னோர்கள் வழியில் ஊர்கூடி பாதுகாத்து விவசாயத்தையும் விவசாயம் சார்ந்த தொழில்களைகளையும் மீட்டெடும்போம் உள்ளூர் பொருதாராத்தை வளர்த்தெடுத்து தற்சார்பை தக்கவைப்போம்.

நம்மை விட, நமது மண்ணை, நேசிப்பவர்கள் எவரும் இருக்க முடியாததை உணர்வோம். நமது காவிரி தாயை மீட்டெடுப்போம், இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் நமது சந்ததிகள் வாழ வழி செய்யும்.

காளவாடப்படும் காவிரியை கையகப்படுத்துவோம்.

– இராசசேகரன் மன்னை

# நதிக்கரையோரம்

காவிரியைத் தேடி
கரையோரம் காத்திருந்தேன்.
தென்றல் கூட தீண்டவில்லை
அனல்காற்றே ஆறுதலளித்தது.

ஊர்ந்து நீ வந்துவிடு - எம்
உழவனுக்கு உதவியாய்
தவழ்ந்து நீ வந்து விடு - நம்
தமிழ்நாட்டுக்கு தாகமாம்.
பாய்ந்து நீ வந்துவிடு - உம்
பசுமையை பரப்பிவிட.

இயற்கை படைத்த என்னவளே!
விளைச்சல் இல்லா விளைநிலமாய்
வீணானதே எம் நெல்மணிகள்.

நீதியும் செத்து போனது
மனிதநேயமும் மறந்து போனது - இங்கே
ஊர்கேட்க உரக்க முழங்குகின்றோம்.
காதுகொடுத்து கேட்க ஆளிலில்லை
ஆள்கின்ற ஆட்களுக்கோ காவிரி
மேலாண்மை அமைக்க ஆளுமையில்லை.

உதிரம் கொடுத்து உரைத்தாலும் - நாங்கள்
மழலை என்ற ஏளனம் உமக்கு
ஏளனத்தால் நீ மிதித்தால்
மழலை இல்லை மாவீரர்கள் - என
நிமிர்ந்தெழுவோம்.

கரைபுரண்டு வா காவிரியே!
காத்திருக்கிறேன் கரையோர நாணலாய்

- இலக்கியா இளவரசன்



ஆசிரியை
நிர்மலா லூர்து மேரி
பூவனூர்

காட்டுத்தீயை அணைக்கும்
நீர் தவறன்று

உரிமைத்தீயை அணைக்கும்
நீர் சரியன்று

எக்காரணமாயின் அறம் பேணுதல்
நம் உயிர்மூச்சின் முகாந்திரம்

மீறுவோர் இடத்தில் கண்டிப்பு பேணுதல்
நம் சனநாயகத்தின் சுதந்திரம்

நோக்கம் என்பது நீருக்குதான்
அதில் மாற்றல்ல

இருளில் நீர் மறைய நேர்ந்தால்
அது மரபல்ல

அவ்விருள் நீங்க தீயை ஏந்தினால்
அதில் தவறல்ல

ஆடுகளத் தேவை வேண்டாம் தற்சமயம்
ஏர்களத் தேவை வேண்டும் இச்சமயம்

மோகத்தின் ஒளியை தேடாதே நண்பா
உண்மையின் நிழலைத் தேடுவோம்.



- த.வா.அஜய்பிரசாத்

# விகிதாச்சாரம்


செந்தில் பக்கிரிசாமி
மன்னை

பலர் இணைந்து பங்குதாரர்களாக செய்யும் தொழிலில் இந்த விகிதாச்சாரம் என்பது பொதுவான காரணி.

அதாவது ஒருவர் செய்யும் முதலீட்டின் அளவிற்கு ஏற்ப லாபத்தில் பங்கு பெறுவது. பங்கு சந்தையில் முதலீடு செய்பவர்களுக்கு இது பரிச்சயம்.

பொதுவான ஆட்களுக்கு புரியும்படி சொல்ல வேண்டுமென்றால் 5 பேர் சேர்ந்து 1 லட்சம் ரூ முதல் போட்டு ஒரு தொழில் செய்கிறார்கள். அதில் ஒருவர் 10000 மட்டுமே முதல் போடுகிறார். இன்னொருவர் 50000 முதல் போடுகிறார். இப்போது மொத்த முதலில் 10000 முதல் போட்டவரின் பங்கு விகிதம் 10%. 50000 முதல் போட்டவரின் பங்குவிகிதம் 50%.

இப்போது அவர்களுக்கு லாபம் 50000 கிடைக்கிறது என்று வைத்து கொள்வோம். இப்போது 50000 முதல் போட்டவருக்கு 50% விகிதாச்சாரப்படி 25000 ரூ கிடைக்கும். 10000 முதல் போட்டவருக்கு 10% விகிதாச்சாரபடி 5000 ரூ கிடைக்கும்.

இது பொதுவாக அனைவருக்கும் அறிந்ததே.. ஆனால் இது நாள் வரை இந்த முறையை தொழிலில் மட்டுமே நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

இதையே அரசியலில் புகுத்தினால் எப்படி இருக்கும்?

புரியலையா?

தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு கட்சியும் அவர்கள் வாங்கும் வாக்குகளுக்கு ஏற்ப அவர்களுக்கான சட்ட மன்ற உறுப்பினர் இட ஒதுக்கீடு விகிதாச்சார முறையில் செய்வது.

தமிழகத்தில் சட்ட மன்ற அமைச்சரவை மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 234. இதில் தற்போது ஆளும் கட்சி 41% வாக்குகள் பெற்று உள்ளது. இதன் படி பார்த்தால் 234 ல் 41% என்பது ஏறக்குறைய 96 சட்ட மன்ற உறுப்பினர்கள் (ச.ம.உ) மட்டுமே அவர்களுக்கு ஒதுக்கப்படும்.

இதே போல் எதிர் கட்சி 40% வாக்கு களை பெற்று இருக்கும் போது அவர்களுக்கு 94 ச.ம.உ க்கள் கிடைக்கும்.

இதே போல் 4% வாக்கு பெற்றவர்களுக்கு 7 ச.ம.உ க்களும், வெறும் 1% வாங்கி இருக்கும் கட்சிகளுக்கு குறைந்தது 2 ச.ம.உ. க்களும் கிடைக்கும்.
எனவே இந்த முறைப்படி பார்த்தால் குறிப்பிட்ட அளவு வாக்குகள் பெறும் அத்தனை கட்சிகளுக்கும் சட்டசபையில் உறுப்பினராக பணியாற்ற  வாய்ப்பு கிடைக்கும். இது ஒரு ஆரோக்கியமான அரசியலை முன் எடுக்க வைக்கும்.

இதில் பலருக்கும் பல கேள்விகள் உண்டு.

கேள்வி 1:
தனிப்பெரும்பான்மை உறுப்பினர் எண்ணிக்கை 118 என்ற எண்ணிக்கை இல்லாமலே ஒரு கட்சி எப்படி ஆட்சி அமைக்க முடியும்?

பதில்:
பெரும்பான்மை என்பது மொத்ததில் 50% க்கு மேல். ஆனால் வெறும் 41% வாக்குகள் பெற்ற கட்சி ஒன்று ஆட்சி அமைப்பதே பெரும்பான்மை இல்லாமல் தான்.அதை மட்டும் எப்படி நம் சட்ட அமைப்பு அனுமதிக்கிறது?

கேள்வி 2:
இந்த முறையில் யார் ஆளும் கட்சி? சட்டமன்ற பெரும்பான்மை எண்ணிக்கை என்பது எவ்வளவு?

பதில்:
நிச்சயமாக அதிக வாக்குகள் பெற்ற கட்சியே ஆளும் கட்சி. பெரும்பான்மை என்பது எந்த நிலையான எண்ணிக்கை அல்ல (118 போல). விகிதம் மட்டுமே .எந்த ஒரு கட்சி அதிக ஆதரவு பெறுகிறதோ அதுவே ஆளும் கட்சி. அந்த எண்ணிக்கை வெறும் 70 கூட இருக்கலாம் அல்லது 118 ஆகவும் இருக்கலாம். அவையாவும் அந்த அந்த கட்சிகள் பெறும் வாக்குகளை பொறுத்தது. ஒரு வேளை 49% ஒரு கட்சியும் 51% மற்றொரு கட்சியும் பெறும் போது நிச்சயமாக தனிப் பெரும்பான்மை எண்ணிக்கை அதிகமாகும். இரண்டாவது இடம்  பிடிக்கும் கட்சி எதிர்க்கட்சி.

கேள்வி 3:
ஒரு வேளை இரண்டு கட்சிகள் தலா 50% வாக்குகள் வாங்கும் நிலையில் எது ஆளும் கட்சி?

பதில்:
இதே பிரச்சனை இரு கட்சிகள் சமமாக 117 இடங்களை பிடிக்கும் போது யார் ஆளும் கட்சி என்று தீர்மானிக்க முடியும்?

உண்மையை சொல்ல வேண்டுமென்றால் இந்த விகிதாச்சார முறையில் அதற்கான சாத்தியக்கூறுகள் குறைவு. ஒரே எண்ணிக்கை யில் துல்லியமாக இரு கட்சிகள் வாக்கு எண்ணிக்கை பெறுவது.

கேள்வி 4:
இந்த முறையில் தொகுதி வேட்பாளர் என்று யார் இருப்பார்? மக்கள் தங்கள் தத்தம் தொகுதி களில் எந்த வேட்பாளருக்கு வாக்கு அளிப்பார்கள்?

பதில்:
வேட்பாளர் என்று யாரும் கிடையாது. அனைத்து மக்களும் தங்கள் அபிமான கட்சியின் சின்னத்திற்கே வாக்கு அளிக்க முடியும். அந்த கட்சியின் கொள்கை, செயல்பாடுகள், தலைவர் (ஒரு வேளை அறிவிக்கப்பட்டு இருந்தால்) இவற்றை எல்லாம் பார்த்தே வாக்கு அளிக்க முடியும்.தனி மனிதருக்கு வாக்கு அளிக்க முடியாது.

கேள்வி 5:
அப்படி என்றால் மக்கள் தங்கள் தொகுதி பிரச்னைகளை முறையிட்டு தீர்க்க ஒரு சட்ட மன்ற உறுப்பினர் வேண்டுமே, யாரிடம் முறையிடுவார்கள்?

பதில்:
இதற்கு பதில் சொல்லும் முன் சில விடயங்களை விளக்கியாக வேண்டும்.
பொதுவாக ஒரு ஊர் என்பது மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி என ஏதோ ஒரு அமைப்பின் கீழ் வரும்.அவர்களின் அடிப்படை தேவைகள் குடிநீர், கழிவு நீக்கம், குப்பை அகற்றுதல், குளம், ஏரி, வடிகால் தூர்வாறுதல், உட் கட்டமைப்புகள், சாலைகள் மற்றும் பல அடிப்படை விடயங்கள் உள்ளாட்சியின் மூலமே தீர்க்கப்படும்.

இதற்கும் சட்ட மன்ற உறுப்பினருக்கும் சம்பந்தம் இல்லை. ஆனால் அரசு கொண்டு வரும் வளர்ச்சி திட்டங்களை தத்தம் ஊருக்கு கொண்டு வர, நெடுஞ்சாலை, ஆறு, பேருந்து, மேம்பாலம், கல்வி நிறுவனம், நூலகம், மருத்துவமனை, பேருந்து நிலையம் இது போன்று புதிதாக பல திட்டங்களை கொண்டு வர, மற்றும் இவை சம்பந்தப்பட்ட குறைகளை சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் சட்டமன்றத்தில் தெரியப்படுத்த என ஏறக்குறைய ஒரு செய்தி பரிமாறுபவர் வேலைதான் ச.ம.உ.வேலை.

எனவே இந்த முறையில் 234 ச ம உ களையும் அவர்கள் கட்சிகளே தேர்வு செய்யும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட விகிதப்படி. அவர்கள் அனைவரையும் 32 மாவட்டங்களுக்கும் பிரித்து விடுவார்கள். ஆக ஒரு மாவட்டதிற்கு சராசரியாக 7 பேர் இருப்பார்கள். மாவட்டங்கள் அளவை பொறுத்து எண்ணிக்கையில் ஏற்ற இறக்கங்கள் இருக்கும்

அந்த எழுவர் கொண்ட குழுவிற்கு ஒரு தலைமை அமைச்சர் இருப்பார். அவர் ஆளும் கட்சி ஆளாக மட்டுமே இருப்பார்.

எனவே அந்த 7 பேர் கொண்ட குழுவினர் கையில் அந்த மாவட்ட பணிகள் இருக்கும். எனவே அந்த மாவட்ட மக்கள் தங்கள் தொகுதி குறைகளை அவர்களிடம் முறையிட வேண்டும். அவர்கள் பகுதி வாரியாக அந்த பணிகளை அந்த 7 பேரும் பிரித்தக் கொள்வார்கள்.

சரியாக கவனிக்காதவர் மீது தலைமை அமைச்சரிடம் புகார் அளிக்கலாம்.

கேள்வி 6.
எப்படி மாவட்ட ரீதியாக உறுப்பினர் தேர்வு செய்யப்படுவார்கள். போட்டி இருக்குமே?

ஏறக்குறைய அரசு அதிகாரி நியமனம் போல தான்.ஆனால் குலுக்கல் முறையில் மட்டுமே தேர்வு செய்யப்படுவார்கள்.அதுவும் சட்ட சபையிலே ஆளுநர் முன்னிலையில்.

இதே போல் தலைமை அமைச்சர் பகுதி வாரியாக அவர்கள் உறுப்பினர்களை நியமிப்பார்கள்.

உதாரணமாக ஒரு மாவட்டத்தில் 7 தொகுதி எனில் ஒவ்வொரு தொகுதிக்கும் தலைமை அமைச்சர் ஒருவரை நியமிப்பார்.

இதனால் சொந்த ஊரைச் சார்ந்தவர்கள் அந்த ஊருக்கு ச. ம.உ வாக போக முடியாமல் போகலாம்.அதில் ஒன்றும் தவறு இல்லை.மாவட்ட ஆட்சியர் நிலைமையும் அது தானே.அதற்காக அவர்கள் சரியாக பணியை செய்யாமலா இருக்கிறார்கள்.

இவையாவும் என்னுடைய கற்பனையில் விளைந்த ஆலோசனைத் திட்டங்கள். இதில் நடைமுறை சாத்தியக்கூறுகள் இருக்கலாம்.தவறுகளும் இருக்கலாம்.

ஆனாலும் இது ஒரு யோசனை மட்டுமே.

மக்கள் நேசிக்கும் அனைத்து கட்சிகளும் சட்டசபையில் இடம் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக என்னால் எழுதப்பட்ட கட்டுரை.

தவறு இருப்பின் சுட்டிக் காட்டுங்கள்.

- மன்னை செந்தில் பக்கிரிசாமி

# தேன் எடுக்க வந்தீங்களா..



மன்னார்குடி
ரா. ராஜேஷ்

மீத்தேன் எடுக்க வந்தீங்களா...

வேசமா பாசம் காட்டி
விதையெல்லாம் பறிச்சீங்க
விவசாயத்தை அழிச்சீங்க....

மருந்துன்னு நீங்க கொடுத்த
நஞ்சால
பொன்னா விளைஞ்ச
மண்ணை மலடாக்கி போனீங்க..

ஆள்பவனுக்கு
ஆத்துமண்ணு ஆசை காட்டி
அன்னை காவிரியை
அணைப்போட்டு சிறைவச்சீங்க....

ஆண்டுகள் பல ஆச்சி..
ஆழ்துளை கிணறும்
அடியோடு வத்தி போச்சி..
ஆனா அறிவு கண் திறந்துடுச்சி..

சாதியம் எனும் சதியோ
மதமெனும் மயக்கமருந்தோ
செலுத்த வெள்ளந்தி
அல்ல நாங்கள்
உன்னை வெல்லும் தீ..
பயமறியா
பாயும் புலி கூட்டமிது..

அகிம்சை வாளெடுத்து
அறப்போர் செய்யும்
மறத்தமிழ் மண்ணுங்க இது...

இங்க

தேன் எடுக்க வந்தீங்களா...
மீத்தேன் எடுக்க வந்தீங்களா...

# பொதுத் தேர்வு

இதில் புதுமை
எதுவும் இல்லை;

மேற்கல்வியின் அடிப்படைகளை அறிய
ஒரு தொடக்கம்.

வாழ்க்கையில் போராடி வெல்ல
கல்வி ஒரு ஊன்றுகோல்,

அந்த கல்வியை
போராட்டமாக நினைத்து
முட்டி மோதினால்
இறுதியில் ஏமாற்றமே மிஞ்சும்....

கடிகார முள் பார்த்து
உன் புத்தகத்திற்கு நெருக்கடி தாராமல்

முள்ளாய் சுழன்று
புது புத்தகம் படைத்திடு....

சிறகாய் பறந்திடு
வானில் எல்லை இல்லை.

இலட்சியம் உள்ளவனுக்கு
இருள் கூட இமயம் தொடும் ஆயுதம்.

பாதையில் முள் இருந்தால்
பாதம் பயப்படும்,

பார்வைத் தெளிவானால்
பயங்கள் பயந்தோடும்...

தோல்விகளை கண்டு துவண்டு விடாதே,
வீரநடை போட்டு வெற்றி கண்டிடு.

முடங்கியவனுக்கு
கால்கள் முழுக்க பூட்டு!

எழுந்து நடப்பவனுக்கு விரல்கள்
முழுக்க சாவி!
தேர்வின் வெற்றி வாழ்வின்
வெற்றியும் இல்லை....

தேர்வின் தோல்வி வாழ்வின்
தோல்வியும் இல்லை...

தேர்வு முடிவுகள்
நேர்மறையோ எதிர்மறையோ
எதுவாயினும் மகிழ்ச்சி ஒன்றையே
மனதார ஏற்போம்....

மாணவ சமுதாயதமே,
தற்சார்பு தமிழகத்தின் தூண்களே

எல்லாம் நன்மைக்கே என்று
முடிவு செய்வோம்!

தமிழா தமிழன் என்ற திமிரோடு
திணறாமல் நடைபோடு.....

பொன்மணி வள்ளுவன்,
கீழத்திருப்பாலக்குடி, மன்னார்குடி.

# தோல்வி நிலை என நினைத்தால்


மணிபாரதி தங்க சுந்தர்

சுவரில் ஊர்ந்து செல்லும் எறும்புகளை பார்த்திருப்போம். சிறுவயதில் அதை நாம் கைகளை வைத்து வழிமறித்து விளையாடிருப்போம். உடனடியாக அந்த எறும்புகள் வேறொரு வழியை கண்டுபிடித்து நடைப்போடும். எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் இறுதிவரை என்னால் முடியும் என்ற நம்பிக்கையில் பயணிக்கும். ’’என்னால் முடியும்‘‘இதுவே வெற்றியின் மொழி.

ஒரு மரத்தில் ஏறுவதற்கு இரு வழிகள் உண்டு..ஒன்று நாமே ஏறுவது. மற்றொன்று யாராவது ஏற்றி விடுவார்களா என காத்திருப்பது. முடிந்த அளவிற்கு நாமே ஏற முயற்சி செய்வோம்.

ஒவ்வொரு மனித உயிரும் 14 வயதை எட்டும் முன் ’உன்னால் முடியாது’ என்று தன் பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள், சமூகத்தால் வார்த்தையை கேட்கிறேன் என்று ‘‘தாயம் என்ற புத்தகத்தில் மஹாத்ரயா ரா எழுதியதை படித்திருக்கிறேன். இது நம் ஒவ்வொருவர் மனதிலும் ஆழமாக பதிவாகியுள்ளது. இதை மாற்றி நம்மால் முடியும் என்ற எண்ணத்தை வளர்க்கவேண்டும். இதுவே வெற்றியின் ரகசியம்.

ஒரு உதாரணம்:-

வறுமை மிகுந்த குடும்பம். அப்பா ஒரு குடிக்காரர். குடும்ப பொறுப்பில்லாதவர். தாயார் இசைப் பாடம் நடத்தி வாழ்க்கை ஓடியது.. அருமை மகனை படிக்க வைக்க வசதி இல்லாத காரணத்தால் ஒரு அலுவலகத்தில் எடுபுடியாக சேர்ந்து விட்டாள். அம்மா படும் சிரமம் அவன் கண்முன்னே நின்றாலும் திட்டு வாங்கும் எடுபிடி பயலாய்த் தன் வாழ்வு வீணாகிவிடுமோ என்ற பயத்தினால் வேலையை ராஜினாமா செய்து விட்டு தன் தாய்க்கு ஒரு கடிதம் எழுதினான். ✸அம்மா கடவுள் கொடுத்தது ஒரே ஒரு வாழ்க்கை. அதையும் அலுவலக பையனாக வீணாக்குவது புத்திசாலித்தனமல்ல. அதனால் வேலையில் இருந்து விலகி விட்டேன்✸ என்று எழுதினான்.

பல தோல்விகளுக்கு பிறகு நாவல்கள் எழுதினான். பல கலை அவதாரங்கள் எடுத்து தோல்வியுற்றான். இறுதியாக நாடக ஆசிரியராக மாறினான். வெற்றிகள் பல பெற்று பெரும் புகழ் அடைந்தான். இலக்கியத்திற்கு நோபல் பரிசு பெற்றப்போது தான் அவனுக்கு அன்று நாம் எடுத்த முடிவு தான் சரி என தோன்றியது. யார் அவன்? பெர்னாட் சா...

இன்னொரு உதாரணம்:

ஒரு நாலு வயது குழந்தை ஆசை ஆசையாக அலங்காரம் செய்து பள்ளிக்கூடம்

அனுப்பினாள் அம்மா. குழந்தைக்கு கொஞ்சம் காது மந்தம். டாமி என்பது அதன் செல்ல பெயர். மூன்று மாதங்கள் பள்ளிக்கு சென்று வந்த அந்த குழந்தையின் சட்டைப்பையில் ஒரு காகிதத்தை திணித்து அனுப்பியிருந்தார் ஆசிரியை..

‘‘படிப்பதற்கு லாயக்கற்ற முட்டாள் உங்கள் டாமி..இவனை இனிமேல் பள்ளிக்கு அனுப்பி தொந்தரவு செய்யாதீர்கள்‘‘ என்று எழுதியிருந்தார்.

படிக்க லாயக்கில்லை என்று ஒதுக்கப்பட்ட பையனை பற்றி மற்றும் அவன் கண்டுபிடிப்புகள் பற்றி இன்று பள்ளிக்கூடங்களில் பாடமாக படிக்கிறார்கள்.

அந்த முட்டாள் டாமிதான் பல்பை கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசன்....

இதுபோன்று இன்னும் பலரின் வாழ்க்கை நமக்கு உதாரணமாக இருக்கிறது.

நம்மை பற்றிய எதிர்மறை கருத்துக்களை வெற்றிகளால் எதிர்கொள்வது தான் சரியான வழி.

இது நம் வாழ்க்கை... வெற்றி தோல்விகள் நம்மையே சாரும் எனவே முடிவுகளை நாமே எடுப்போம்.

முடிவுகள் எப்போதும் நம்மை தேடி வராது.. நாம் தான் முடிவுகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.

முடியாது என்பது முட்டாள் தனம்...
முடியும் என்பதே மூலதனம்...

வாழ்த்துகள் உடன்பிறவா உறவுகளே...

## - மணிபாரதி தங்க சுந்தர்

அட்டைப்பட உதவி
VASA PHOTOGRAPHY

**வசந்தன்**
hp: 9786828973
vasaclicks@gmail.com
vasa photography

# என்னவளே

உன்
கருவிழியினை
கொண்டு
என்னை
கடத்தியவளே....

துறத்தும்
உன்
இரு
விழிகளினால்
என்
தூக்கம்
தொலைந்ததடி....

கண்ணே
உன்னை
காதலிக்க
ஒரே ஒரு
வாய்ப்புக்
கொடு....

உன்னை
நேசிக்க
என்னை
ஆணையிடு....

உன்
அழகை
என்னை
ஆளவிடு....

உன்
இதழில்
என்னை
இருக்கிவிடு...

பெண்ணே
உன்னில்
தொலைந்த
என்னை
தேடவிடு....

உன் மடிமீது
சாய்ந்து
உறங்கவிடு....

உன் காலில்
கொலுசாக
வாய்ப்புக் கொடு...

பெண்ணே வேண்டாம்
என்று
இருந்த
என்னை
உனக்காக
வாழவிடு.....

அன்புடன்
S.S.கார்த்திக் DME
உள்ளிக்கோட்டை

# உனக்காக

நீ பத்து மாதம்
என்னை உன் அடிவயிற்றில்
சுமந்ததில்லை...

உன் தோள்மீது ஏறி
நான் இந்த உலகை இரசித்ததில்லை....

உன் கைக்கோர்த்து
ஆனந்தமாய் சாலையோரம்
நடந்ததில்லை...

சிறுவயதில் உன்னோடு
விளையாடி மகிழ்ந்த அனுபவமும்
எனக்கில்லை...

தவறுகள் நான் செய்திடினும்
அதற்காய் எனை நீ தண்டித்ததில்லை....

அன்னையாய்
எனை அன்புசெய்தவனும் நீ தான்...

தந்தையாய்
எனை நல்வழிப்படுத்தியவனும் நீ தான்...

எங்கோ இருந்த நீ
எனக்கு அண்ணனான காரணம்
அறிந்தால் அந்த இரகசியம்
என்னவென்று எனக்குரைப்பாயா..?

உனை நான் தெரிந்து
உன்னிடம் நான் பழகிய நாள் முதல்

இந்நிமிடம் இதை என் எழுதுகோல்
செதுக்கும் நொடி வரை

ஒரு நாளேனும்
உனைப்பற்றி நினைக்காமல்
இருந்ததில்லை நான்...

பல பொறுப்புகளை உடையவனாக
இருப்பினும்..

சிறு நிமிடத்தை எனக்காகவும்
ஒதுக்கினால் இன்னும் மகிழ்வடையும்
என் மனம்...!

அடிக்கடி டூ விட்டாலும் அடுத்த
கணமே சே விடும் ஒற்றை உறவு
நீ மட்டும் தான்...

எப்போதும் எனக்காக இருப்பாயென்று
என் மனம் அறியும்
அண்ணா....

உன் பெயரை சொல்லி அழைக்க
இயலாவிட்டாலும்

என்றென்றும் உரிமையுடன் உனை
அழைப்பேன்
அண்ணா என்று...!!

**க. உதயநிதி**
இளங்கலை ஆங்கிலம் இரண்டாம் ஆண்டு,
மன்னை இராசகோபாலசுவாமி அரசினர் கலைக்கல்லூரி.

# எழு(த்)து...

அ என்று ஒரு எழுத்தில் ஆரம்பித்த நமக்கு, நம் பெயருக்கு பின் இரண்டு அல்லது மூன்று எழுத்து வந்தவுடன் அந்த பழக்கமே மறந்து போய்விடுகிறது அல்லது மறைந்து விடுகிறது.

பள்ளி, கல்லூரிகளில் எழுதியே ஆக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்றால் நம்மில் பலர் எழுதும் பழக்கத்தையே வைத்துக் கொள்ளமாட்டோம். ஏன்? என்று யோசித்து இன்னும் இதற்கான சரியான பதிலைத் தேடிக்கொண்டிருக்கிறேன்.

இருந்தாலும் ஒருவனின் வாழ்க்கையில் எழுத்து எவ்வளவு முக்கியமானது, அதனால் அவன் அடையாளம், மதிப்பு, சிந்தனை, கற்பனைத்திறன் ஆகியவை எல்லாம் எப்படி மாறுபடுகிறது என்பதை பற்றி தான் எழுதப்போகிறேன் இம்முறை.

ஒரு இனத்தின் அடையாளம், அவர்களின் கலாச்சாரமும் மொழியும் தான். அம்மொழியின் அடையாளம் எழுத்து தான். வெறும் பேச்சு வழக்கில் இருந்த பல மொழிகள் அழிந்துள்ளதாக தகவல்கள் உள்ளன. இதிலிருந்தே தெரிகிறது எழுத்தின் முக்கியத்துவமும் அதன் வலிமையும்.

நம் முன்னோர்களும் தமிழ் அறிஞர்களும் எழுதிய இலக்கண இலக்கியங்களும், புராணங்களும் அதை அழியவிடாமல் காத்து வரும் நம் இனத்தவர்களாளும் தான் நம் மொழி இன்றும் உயர்ந்து நிற்கிறது.

அது மட்டுமின்றி ஒருவர் தன் எண்ணத்தை ஆழமாகவும் வலிமையாகவும் பதிவு செய்ய பயன்படுத்தும் உன்னதமான கருவி தான் ’எழுத்து’. ஏனெனில் வாய்மொழியாக கூறும் போது சிலர் கேட்பதும் இல்லை அது பலரை சென்றடைவதும் இல்லை. அப்படியே சென்றடைந்தாலும் அதன் தன்மை மாறிவிடும். ஆனால் அதையே எழுத்தாக பதிவு செய்யும் போது அதன் ஆழமும் அர்த்தமும் அப்படியே சென்றடைவதோடு, படிப்பவர்களை உணரவும் செய்கிறது.

ஒருவன் எழுதும் போது அவனுக்கு சமூகத்தின் மீது இருக்கும் பார்வையும், அவன் மீதான சமூகத்தின் பார்வையும் உயரும், மேலும் எழுத உத்வேகம் அளிக்கும், பல விடயங்களை ஆராய தோன்றும், எண்ணத்தை சீர்படுத்தும், தெளிவான சிந்தனையை அளிக்கும், பல புத்தகங்களைப் படிக்கத் தோன்றும்.

மேலும், எழுத்து சமூகத்தில் மாற்றத்தையும், புரட்சியையும் ஏற்படுத்தும் என்பதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை கூற விரும்புகிறேன். கம்யூனிசத்தின் தந்தை கார்ல் மார்க்ஸை அறியாதவர் யாரும் இருக்க முடியாது. அவர் நாட்டில் ஏழை பணக்கார

வேற்றுமை, முதலாளித்துவம் ஓங்கி இருந்த காலம். ஏழைகள் சாப்பிட மிகவும் சிரமங்களை அனுபவித்தனர். அந்த அளவிற்கு அவர்களை அடிமைப்படுத்தி வைந்திருந்தனர் முதலாளிகள். அந்த நிலையில் தன் குழந்தையின் பசியைப் போக்க கூட போதுமான பணம் இல்லை அவரிடம்.

இருந்த பணத்தில் பிள்ளைக்கு பால் வாங்கி வருமாறு தன் மனைவி கூற அவரும் கடைத்தெரு சென்று வீடு திரும்பினார். ஆனால் அவருடைய கையில் பாலிற்கு பதில் மை(ink) பாட்டில் இருந்தது. அதைக்கண்ட அவரது மனைவி கோபத்தில் திட்ட, அதற்கு மார்க்ஸின் பதில் ‘‘இன்று இந்த பணத்தை வைத்து நம் குழந்தையின் ஒரு நாள் பசியை தான் என்னால் போக்க முடியும், ஆனால் இந்த மையை வைத்து பல குழந்தைகளின் பல நாள் பசியை என்னால் போக்க முடியும்’’ என்று கூறி எழுதிய நூல் தான் ’மூலதனம்’ (Das Kapital). இறுதியல் அவரது குழந்தை இறந்தது, கம்யூனிஸம் பிறந்தது. இந்த நூலை கம்யூனிசத்தின் ’பைபிள்’ என்றும் கூறுவார்கள். இன்று பணக்கார ஏழை வேறுபாடு, அடிமைத்தனம் இல்லாமல் இருப்பதற்கு இந்த நூலே காரணம்.

நமது எழுத்தும் எதாவது ஒரு மாற்றத்தை கண்டிப்பாக உருவாக்கும் என்ற நம்பிக்கையுடன் எழுத தொடங்குங்கள்.

இலக்கிய இலக்கணங்கள் படைத்தவர்கள் எழுதுவதை விட புதிய எழுத்தாளர்களின் பங்களிப்பு மிகவும் அவசியம். ஆகவே, நம்மையும் நம் மொழியையும் காத்து வளரச்செய்ய எழுதுவோம்.

இப்படி இன்று பல எழுத்தாளர்களை உருவாக்கிய திறவுகோல் இதழுக்கு நன்றியையும் வாழ்த்துகளையும் உரித்தாக்குகிறேன்.

நன்றி.



- பாலாஜி சுதந்திரராஜன்
மன்னை

# சித்திரை பெண்

இப்படிக்கு
**கண்ணம்மா (எ)** EGR
உள்ளிக்கோட்டை

அழகியே சித்திரையே
என் சித்திரை ஆண்டின்
முதல் மாதமானவளே!

பெண்ணுக்கான சிறப்பைப் பெற்று
பெண்புலியாய் இருப்பதால்
உன்னை முதலில் வணங்கி
என் வருடங்களை பிறப்பிக்கின்றேன்
தாயானவளே!

முத்து என்னும் பொருள் உடையவளே
நட்சத்திரங்களின் நடுவினில் வாழ்பவளே!

அட்சய திதியின் பெருமைப் பெற்று
பொருள் வளம் அள்ளித்தருபவளே
தங்கமகளே!

நீ மரமாக நின்று
மரங்கொத்தியைக் காப்பதுப் போல்
என் தமிழ் சொந்தங்களையும் காப்பவளே!

பல கடவுளின் அவதாரத்தைப் பெற்று
அதை கொண்டாடும் சிறப்பைப் பெற்றவளே!

நீ அக்னி நட்சத்திரமாய் உக்கிரம் பெற்று
நெருப்பாய் வெயிலின் தாக்கத்தை அள்ளித்தருபவளே!

பௌர்ணமியின் அழகை சந்திரன் மாதம் ஒருமுறை பொழிந்தாலும்
சித்திரை பௌர்ணமியின் என்ற சிறப்பைப் பெற்றவளே!

மொத்தத்தில் வெயிலின் தாக்கத்தில் இராட்சத குணம் கொண்டாலும்

மாதங்களின் அன்னை என்னும் பரிசத்தில்
உள்ளம் கொள்ளைக் கொண்டு உன்னை வணங்கி மகிழ்கிறோம்
சித்திரை பெண் ஆனவளே!

# எங்கள் உடலே எங்களுக்கு எதிரியா?



மகாலெட்சுமி

சமீபத்தில் ஒரு செய்தியை கண்டு அதிர்ந்து போனேன். மனம் நெருடலுக்கு உள்ளானது. என்றுதான் இதுபோன்ற சம்பவங்களுக்கு விடிவுக்காலம் வருமோ என்று மனம் பதைபதைக்க தொடங்கியது. ஒரு பெண் தனது பிறப்பிலிருந்து இறப்பு வரை அவளது வாழ்வில் ஒருமுறையாவது பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகாமல் வாழவே முடிவதில்லை. இது இன்று நேற்று நடக்கும் சம்பவமல்ல. காலம் காலமாக அரங்கேறிக் கொண்டிருக்கும் கொடுமை. இதற்க்கு இப்பூமியில் பிறந்த எந்தவொரு பெண்ணும் விதிவிலக்கல்ல. இதனை எழுதும் நான் உட்பட. இதற்க்கு காரணம் தான் என்ன? ஏன் இவ்வாறு மனித தன்மையை இழந்து நடந்துகொள்கிறார்கள்.

நிர்பயவில் தொடங்கி ஆசிபா வரை இந்த கொடுமைகள் அதிகரித்துக்கொண்டே தான் இருக்கின்றன. தண்டனைகள் கொடுக்கப்பட்ட போதிலும் இவை தொடர்ந்துகொண்டே தான் இருக்கின்றன. இதற்க்கு உங்களின் பதில் பெண்களின் உடை என்றால், எட்டு வயது குழந்தையிடம் எந்த ஆபாசத்தை கண்டு கற்பழித்தார்கள். எட்டு வயது என்பதே அதிகம் தான். தற்போது பிறந்த குழந்தைகளை கூட விட்டு வைப்பதில்லை சில காம வெறியர்கள். இதற்க்கு என்ன தான் தீர்வு? இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போதே அருவருப்பாக உள்ளதல்லவா?

இதற்க்கு தீர்வு மக்களாகிய நம்மிடமே உள்ளது. அதாவது நாம் முதலில் மனிதர்களாக வாழ வேண்டும். ‘‘தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை’’ என்ற பழமொழியை கேள்விபட்டிருப்போம். ஆம். நாம் எதனை எவ்வாறு பார்த்து, கற்று, புரிந்துகொள்கிறோமோ அவ்வாறே நாம் வளர்கிறோம்.

பெற்றோருக்கு ஒன்று கூற விளைகிறேன். உங்கள் மகனை நீ ஒரு ஆண் என்று கூறி வளர்க்காதீர்கள். உங்கள் மகளை நீ ஒரு பெண் என்று கூறி வளர்க்காதீர்கள். உங்கள் பிள்ளைகளை இந்து, கிறிஸ்துவர், இஸ்லாமியர், கீழ் சாதி, மேல் சாதி என்று கூறி வளர்க்காதீர்கள். மாறாக ஒரு நல்ல மனிதனாக மட்டும் வளர்க்க முயற்சியுங்கள். உதாரணமாக உங்கள் மனைவியை நீங்கள் எவ்வாறு நடத்துகிறீர்களோ, அவ்வாறு தான் உங்கள் மகன் நாளை அவன் மனைவியை நடத்துவான்.

உங்கள் மகளும் நாளை இன்னொருவர் இல்லம் சென்று இதை போல் தான் வாழ்வால் என்பதை மறவாதீர்கள். இவ்வாறாக ஒரு ஆண் ஒரு பெண்ணை அடக்கி ஆளும்படியான ஒரு சம்பவத்தை குழந்தைகள் பார்க்க நேரிடில் அவர்கள் மனதில் பெண் என்பவள் பலவீனமாகவும் ஆண் என்பவன் அவளை அடக்கி ஆளும் சக்தி

கொண்டவன் என்ன்றும் நினைக்க தொடங்கி விடுவார்கள். அதேபோல் மனைவிகளும் தன கணவர்களை சரியாக நடத்தினால் தான் உங்களை பார்த்து வளரும் உங்கள் மகள்கள் மாமியார் வீட்டில் மரியாதையோடு நடந்துக் கொள்வார்கள், பலக் குடும்ப பிரச்சனைகளும் குறையும்.

தாய்மார்களுக்கு ஒரு வேண்டுகோள். வீடுகளில், பெண் பிள்ளைகள் தான் இந்த வேலைகளை செய்ய வேண்டும். ஆண் பிள்ளைகள் இதுபோன்ற வேலைகளை செய்ய கூடாது என்று தயவு செய்து சொல்லி வளர்க்காதீர்கள். இது உங்கள் ஆண் பிள்ளைகளை பிற்காலங்களில் ஆணவத்தோடும் உங்கள் பெண் பிள்ளைகளை தாழ்வு மனப்பான்மையோடும் வளரச் செய்யலாம். பிள்ளைகளுக்கு பொதுவாக அனைத்து வேலைகளையும் சொல்லிக் கொடுங்கள். ஒற்றுமையாக பிரித்து ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள சொல்லுங்கள். ஏனெனில் கற்றுகொள்ளும் எந்த விடயமும் வீண் போவதில்லை.

எதற்காக இவற்றை கூறுகிறேன் என்றால் ஆண், பெண், என்றிருக்கும்போது தான் வேற்றுமையே உருவாகிறது. ஆண் என்பவன் அடக்கும் வர்க்கத்தை சேர்ந்தவன் என்ற எண்ணம் தோன்றும் பத்து தான் இதுபோன்ற குற்றங்கள் அதிகம் நடக்கின்றன. அதேபோன்று பெண் பிள்ளைகளுக்கு மிளகு தெளிப்பான் (pepper spray) வாங்கி கொடுப்பதற்கு பதிலாக தன்னம்பிக்கையை வளர்க்கும் தற்காப்பை சொல்லி கொடுங்கள்.

ஏனெனில் ஆபத்து நேரங்களில் கைப்பையில் இருந்து மிளகு தெளிப்பானை தேடுவதற்கு பதில் தன்னம்பிக்கையோடு துணிந்து எதிர்ப்பதே உதவும். அதுபோல் ஒரு பெண் பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு அதனை வீட்டிலுள்ளோரிடம் பகிரும்போது மனம் சோர்ந்து போகாது அப்பெண்ணிற்கு ஆறுதல் கூறி தைரியமாக வாழ்கையை எப்படி எதிர்கொள்வதென்று சொல்லிக் கொடுங்கள்.

மாறாக, நீங்களும் மனதளவில் உடைந்து அப்பெண்ணை வீட்டுகுள்ளேயே அடைத்து வைத்தீர்கள் என்றால் குற்றவுனர்வுக்குள்ளாகி அப்பெண் தவறான முடிவுகள் எடுப்பதற்கு வாய்புகள் உண்டு. ஆறு மணிக்கு மேல் வெளியே செல்வதை தடுப்பதையும், உறவினர், நண்பர்கள் வீட்டுக்குத் தனியே செல்வதை தடுப்பதையும் விட்டுவிட்டு, வரும் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் திறனை வளர்க்க கற்றுகொடுங்கள்.

குழந்தைகளுக்கு சிறுவயது முதலே பாலியல் கல்விக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள். வெறும் பாடத்தை மட்டும் சொல்லிக்கொடுப்பதொடு அல்லாது இதுபோன்ற விடயங்களையும் குழந்தைகளோடு பகிர்ந்து கொள்ளுங்கள். அப்போது தான் அவர்களுக்கு ஏதேனும் நடக்கும்போது அது சரியா தவறா என்று அவர்களால் உணர முடியும். ஏனெனில் அதிகமான குழந்தைகள் அவர்களுக்கு பரிட்சையானவர்கள்

மூலமாகவே பாலியல் தொந்தரவுக்கு ஆளாக்கபடுகிறார்கள். உங்கள் குழந்தைகளின் குறைகளை கேளுங்கள் அதற்க்கு தெளிவான விளக்கங்களை அளியுங்கள். சில குழந்தைகள் பயத்திலேயே சிலவற்றை பெற்றோரிடம் பகிர்ந்து கொள்வதில்லை. ஆதலால், ஆதரவாய் இருந்து அன்போடும் பண்போடும் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுங்கள்.

யாரையும் குறைக்கூறுவதற்காக இதனை எழுதவில்லை. என்னை பாதித்த சில சம்பவங்களை நினைவில் கொண்டு எனது தனிப்பட்ட கருத்தினை பகிர்ந்து கொண்டேன். மனிதன் மனிதனாகவே வாழும்போது மனிதநேயமும் மனிதமும் நிறைந்து தவறுகள் குறைய வாய்ப்புகள் உண்டு. மேலும் பல நிர்பயா, ஹாசினி, ஆசிபாக்களின் உயிரைகே காக்க ஒரு சிறிய முயற்சி.

வாழ்வுக்காக ஏங்கி இன்னுயிரை ஈன்ற சகோதரிகளுக்காக இக்கட்டுரை சமர்ப்பணம்.

- மகாலெட்சுமி சிவானந்தம்

---



பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal மன்னையின் மைந்தர்கள்